விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

சங்கங்கள்:– பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | புரட்டாதி 12 புதன்கிழமை (28.09.2005) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 283

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

# ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்குள் விடுதலைப்புலிகளை அனுமதிப்பதில்லை!

## பிரிட்டன் வெளிவிவகார அலுவலகம் அறிக்கை

(கொழும்பு)

உடன் அமுலுக்கு வரும் வகையிலும், மறு அறிவித்தல் வரையிலும் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களை ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளுக்குள் அனுமதிப்பதில்லை என்ற இணக்கப்பாட்டை ஐரோப்பிய ஒன்றியம் எடுத்துள்ளது.

அத்தோடு தமிழீழ விடுதலைப்புலிகளை பயங்கரவாத அமைப்புப் பட்டியலில் சேர்ப்பது குறித்தும் ஐரோப்பிய ஒன்றியம் ஆழமாகச் சிந்தித்து வருவதாக குறிப்பிடப்படுகிறது.

விடுதலைப்புலிகள் அமைப்பு மற்றும் அதனோடு தொடர்புடைய ஸ்தாபனங்கள் ஆகியவற்றினதும் தனிப்பட்ட ஆதரவாளர்களினதும் சட்டவிரோதம் மற்றும் விரும்பத்தகாத செயற்பாடுகளை தேடிக்கண்டு பிடித்து கட்டுப்படுத்துவதற்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு (12 ஆம் பக்கம் பார்க்க)




# பிரிவினைக்கு முற்றுப்புள்ளி — ஐக்கிய இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வு!

## ஐ.தே.க. தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதி

(கொழும்பு)

பிரிவினைக்கு முற்றுப்புள்ளி வைத்து ஐக்கிய இலங்கைக்குள்ளேயே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படுமென்று ஐக்கிய தேசியக் கட்சி நேற்று வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளித்துள்ளது.பட்டனிக்கு முடிவு, தகைமைக்குத் தொழில்,பிரிவினைவாதத்திற்கு முற்றுப்புள்ளி ஆகிய மூன்று பிரதான விடயங்களைக் கொண்டு மேலும் 20.அம்சங்கள் உள்ளடக்கப்பட்டு மக்கள் நிகழ்ச்சித்திட்டம் என்ற பெயரிலான இரண்டு தொகுதிகளைக் கொண்ட ஐ.தே.கவின் ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று வெளியிடப்பட்டது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டனின் குற்றச்சாட்டை விடுதலைப்புலிகள் நிராகரிப்பு

(கிளிநொச்சி)

ஐரோப்பிய ஒன்றிய தலைமை நாடான இங்கிலாந்து தெரிவித்திருக்கும் குற்றச்சாட்டுக்களை தமிழீழ விடுதலைப்புலிகள் நிராகரித்துள்ளனர். சர்வதேச செய்தி ஸ்தாபனம் ஒன்றுக்கு விடுதலைப்புலிகளின் ஊடகப் பிரிவு ஒருங்கிணைப்பாளர் தயா மாஸ்ரர் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில்,

நாங்கள் பயங்கரவாத இயக்கமல்ல, தமிழ் மக்களின் உரிமைகளுக்காக நாம் போராடிவருகிறோம். இங்கிலாந்தின் குற்றச்சாட்டுக்கள் குறித்த விரிவான அறிக்கைகள் வெளியிடப்படும் என்று அவர் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகளை பயங்கரவாத இயக்கங்க்ள் பட்டியலில் இணைத்து தடைசெய்யப்போவதாகவும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்குள் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் நுழைவது தடைசெய்யப்படுவதாகவும் இங்கிலாந்து அரசாங்கம் அறிக்கை வெளியிட்டிருந்ததையடுத்து விடுதலைப்புலிகளின் தரப்பில் இக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது. (இ-4)

## இனந்தெரியாதோர் சூடு குடும்பப் பெண் மரணம்

### பொம்மைவெளியில் அதிகாலையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொம்மைவெளிப் பகுதியில் நேற்று அதிகாலை குடும்பப் பெண் ஒருவர் இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அதிகாலை வேளையில் எழுந்து வீட்டுக்கு அருகாமையில் உள்ள கிணற்றடிக்கு தண்ணீர் அள்ளச் சென்ற வேளையிலேயே பிரஸ்தாப பெண் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

தலைப் பகுதியிலும் நெஞ்சுப் பகுதியிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

ஊர்காவற்றுறையை சொந்த இடமாகவும் பொம்மைவெளிப் பகுதியை வசிப்பிடமாகவும் கொண்ட நான்கு பிள்ளைகளின் தாயாரான ஜெயராசா வீலாவதி (வயது 36) என்பவரே உயிரிழந்தவராவார்.

பிரஸ்தாப பெண் தனது பிள்ளைகளுடன் குறிப்பிட்ட பகுதியில் இரண்டு மாதங்களுக்கு முன்புதான் குடியேறி உள்ளார்.

சம்பவ இடத்துக்கு சென்ற யாழ்.மாவட்ட பதில் நீதிவான் சிறிநிதி நந்தசேகரம் சடலத்தை பார்வையிட்டதுடன் சடலத்தை மருத்துவ பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

சடலம் யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. அதேவேளை உயிரிழந்தவரின் பிள்ளைகளை நீதிபதி நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்றுள்ளார். (இ-43-8)

## மாணவர்கள்-கடற்படையினர் மண்டைதீவில் நேற்று முறுகல்

(மண்டைதீவு)

பொங்குதமிழ் நிகழ்வில். பிரசாரத்துக்காக மண்டைதீவுப் பகுதிக்குச் செல்லமுற்பட்ட மாணவர்களுக்கும் கடற்படையினருக்குமிடையில் நேற்று முறுகல்நிலை ஏற்பட்டது.

பொங்குதமிழ் ஏற்பாட்டுக்குழுவும் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், கல்வியியற்கல்லூரி மாணவர்கள் ஆகியோர் அடங்கிய குழுவினர் நேற்று மண்டைதீவுக்குச் சென்றனர்.

ஆனால் அங்கு கடமையிலிருந்த கடற்படையினர் மண்டைதீவுப்பகுதிக்கு செல்ல விடாமல் தடுத்து நிறுத்தினர். இதனையடுத்து கடற்படையினருக்கும் பிரசாரக் குழுவினருக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டு வாக்குவாதம் இடம் பெற்றது.

கடற்படையினர் உள்ளே செல்லவிடாது தடுத்ததையடுத்து பிரசாரக்குழுவினர் பொங்கு தமிழ் கோஷங்களை எழுப்பினர். கடற்படையினர் துப்பாக்கி முனையில் மிரட்டிய போதும் அவர்கள் குறிப்பிட்ட இடத்தை விட்டு நகரவில்லை.

சம்பவத்தையடுத்து குறிப்பிட்ட பகுதிக்கு யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரன்,சிவநேசன் ஆகியோர் கடற்படையினருடன் கலந்துரையாடிய போதிலும் மண்டைதீவுப் பகுதிக்கு செல்ல அனுமதிக்கப்படவில்லை. போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு,பாராளுமன்ற உறுப்பினர்கள் முறையிட்டதையடுத்து அங்கு வந்த கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் கடற்படையினர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாணவர்களும் கலந்துரையாடினர்.

இதனையடுத்து ஐந்து மணி நேர இழுபறிக்கு பின்னர் பொங்கு தமிழ் பிரசாரக்குழுவினர் மண்டைதீவுப் பகுதிக்குச் செல்ல படையினரால் அனுமதிக்கப்பட்டது.(இ-43-8)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...



எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# காலமெல்லாம் காத்திருந்தோம்; கண்டபலன் என்ன?

## ஜனாதிபதிக்கு பாதுகாவலர் சங்கத்தின் கடிதம்

அரசின் பாதுகாப்பு படையின ரால் கைதுசெய்யப்பட்டு காணா மல் போன, எமது பிள்ளைகளுக்கு இதுவரை காலமும் என்ன நடந் தது என்ற விபரத்தை நீங்கள் இதுவரை எங்களுக்கு அறியத்தர வில்லை. சகல அதிகாரங்களும் கொண்ட தங்களுக்கு தெரியா மல் இந்த நாட்டில் தங்களது பாதுகாப்புப் படையினரால் நடாத் தப்பட்ட இந்தக் கொடூர நிகழ்வு நிறை வேற்று அதிகாரம் கொண்ட தங்களுக்குத் தெரியாதா?

வாருங்கள் மன்னிப்புவழங்கி பாதுகாப்புத் தருகின்றோம் என்று எம்மை அழைத்து எமது பிள்ளை களை வருடக்கணக்காக மறைத்து வைப்பது நியாயமான காரியமா? கைதுசெய்யப்பட்ட எமது பிள்ளை களுக்கு என்ன நடந்தது என் பதை இதுவரை காலமும் நீங்கள் ஏன் வெளிப்படுத்தவில்லை.

இவ்வாறு வடபகுதியில் படை யினரால் கைதுசெய்யப்பட்ட பொது மக்கள் பெற்றோர், பாதுகாவலர் சங்கம் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அக்கடிதத்தில் மேலும்,

1997ஆம் ஆண்டு வருட இறு தியில் ஈ.பி.டி.பி.செயலாளர் நாய கம் டக்ளஸ் தேவானந்தாவுடன் தங்களை வந்து சந்தித்தபோது பதினாறுபேர் மட்டும்தான் உயிரு டன் இல்லை ஏனையோர் பற்றிய விடயங்களுக்கு நான் பொறுப்பு என்று கூறினீர்கள்.

நீங்கள் கூறி இன்று பத்து வருடங்கள் ஆகின்றபோதும் இதுகுறித்துத் தாங்கள் எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொண் டதாகத் தெரியவில்லை. உங்க ளுடைய வார்த்தைகளை நம்பி எமது பிள்ளைகள் வருவார்கள் என வழி மேல் விழிவைத்து ஏங்கி இருந்த எமது நெஞ்சங்களில் நீங்கள் பாறாங்கல்லை தூக்கிப்போட்டு விட்டீர்கள். எமது பிள்ளைகளுக்கு மரண அத்தாட்சிப்பத்திரம் எடுக் கும்படி அறிவித்துள்ளீர்கள்.

நீங்கள் அரசியல்வாதியாக இருந்த காலத்தைவிட அதிக காலம் ஆண் மகனுக்கு தாரமாக வும் பெற்ற பிள்ளைகளுக்கு தாயாகவும் இருந்துள்ளீர்கள். ஒரு பெண் கணவனை இழந்து தவிப் பது எவ்வளவு தூரம் அப்பெண் ணின் மனநிலையை எவ்வாறு பாதிக்கும் என்பதை நீங்களும் அனுபவத்தால் உணர்ந்துள்ளீர் கள். பிள்ளைகளை இழந்தால் பெற்ற தாய் எவ்வளவு வேதனையை அனுபவிப்பாள் என்பதும் உங்க ளுக்கு விளங்கும் என எண்ணு கின்றோம்.

உங்கள் அரசின் பாதுகாபபு படையினரால் எமது பிள்ளைகளை கைதுசெய்ய அதிகாரத்தை வழங் கியது யார்? எமது பிள்ளைகள் எவரையாவது கொலை செய்தார் களா? அல்லது கற்பழித்துள்ளார் களா? கைதுசெய்யப்படுகின்ற போது கையில் குண்டுகளோ துபபாக்கிகளோ வைத்திருந்தனரா?

எமது இளம் பிள்ளைகளை எம் மிடமிருந்து பிரித்ததன் மூலம் முழுத்தமிழ்த்தேசிய இனத்தை யும் அழித்துவிடமுடியாது என் பதை மனக்குமுறலுடன் தெரிவித் துக்கொள்ள விரும்புகின்றோம்.

ஒரு பெண்ணின் ஆட்சியில் தமிழ் பெண களுக்கு இத்தனை கொடுமைகளா? எனக் குறிப்பிடப்பட டுள்ளது. (து)

# கைத்தொழிலை அபிவிருத்தி செய்யத் தீர்மானம்

(கொழும்பு)

வேலையில்லாப் பிரச்சினைக் குத் தீர்வாக மட்டுப்படுத்தப்பட்ட நிதியை உபயோகித்து சிறிய மற் றும் நடுத்தரக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு விஞ் ஞான தொழில்நுட்ப அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண நட வடிக்கை எடுக்கவுள்ளார்.

வெளிநாட்டு முதலீடுகளை எதிர்பார்ப்பதன் மூலம் மாத்திரம் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்று அவர் தெரிவித்துள்ளார்.

பிலியந்தலையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இந் கக்கருக்துகளைத் தெரிவித்தார்.

அரசதுறையில் தொழில் வாய்ப் புப் பெறுவோரின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளதாகக் கூறிய அவர் வெளிநாட்டு முதலீடு களை எதிர்பார்ப்பதால் மாத்திரம் நாட்டினை முன்னேற்ற முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள மட்டுப்படுத்தப் பட்ட நிதியை பயன்படுத்தி சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் களை அபிவிருத்தி செய்வதற்கு ஏதுவாக இந்தச் செயற்திட்டத் தின் மூலம் வேளையில்லாப் பிரச் சினைக்கும், வறுமை நிலைக்கும் தீர்வு பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அமைச்சர் மேலும் தெரி வித்துள்ளார். (த-7)

# சோதனையிட அனுமதி

(கொழும்பு)

பொது நிதிக் கூட்டுத்தாபனத் தின் சந்தேகத்திற்கிடமான வங் கிக் கணக்குகள் சிலவற்றைச் சோதனையிட நீதிமன்றம் அனு மதி வழங்கியுள்ளது.

திணைக்களத்தில் இடம்பெற் றுள்ளதாகக் கூறப்படும் நிதி மோசடி கள் தொடர்பாக புலனாய்வுப் பிரி வினர் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். இந்த விசாரணை யின் அறிக்கையொன்றை புலனாய் வுத்துறையினர் கொழும்பு நீதிமன் றில் சமர்ப்பித்திருந்தனர்.

இதனை ஆராய்ந்த நீதிமன்றம் சந்தேகத்திற்கிடமான 5 வங்கிக் கணக்குகளை சோதனையிட அனு மதி வழங்கியுள்ளதாகவும் தெரி விக்கப்படுகிறது. அ (த-


# சிறு விளம்பரம்

## மரக்கன்றுகள் விநியோகம்

இந்து ஆலயங்களில் வைத்து வளர்க்கக்கூடிய நாகலிங்கப்பூ, வன்னி மரக்கன்றுகள் விநியோ கிக்க எண்ணியுள்ளோம். ஆர்வ முடையோர் தொடர்பு கொள்ளவும். **Fancy Museum, 253B, GALLE Road, Wellawatte Complex, Colombo-6**

**T.P-0112 580216**

(9914)

## தேவை

கொழும்பு வெள்ளவத்தைப் பகுதி யிலுள்ள பான்சி கடைக்கு உதவி விற்பனையாளர் தேவை. சான்றி தழ்களுடன் விண்ணப்பிக் கவும். விளம்பர இல-100, வலம் புரி, இல-3 2ஆம் ஒழுங்கை,பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.

(9915)

## திருத்துதல்

மூக்குக்கண்ணாடி ஒட்டுதல் சகல வித கெமராக்கள் எலக்ரோனி பிளாஸ்கள் திருத்துதல் உதா ரணமாக ஜெனரேட்டர் வாட்டர்பம் போன்றவற்றின் பாட்ஸ் கையடக் கமாக உள்ள பிளாஸ்டிக் பொருள் உடைவு ஒட்டுதல் போன்றவை விஷேசமாக செய்யப்படும் ரகு போட்டோ டெக்னிக் 301-கஸ்தூரி யார் வீதி யாழ்ப்பாணம். கன்னா திட்டி சந்தி சமீபமாக இடம் மேல் மாடி தொடர்பு சு.நாராயணசாமி.

(9916)


# திறப்புவிழா

பண்ணை சுகாதாரக் கிராமத்தில் உலக வங்கியின் நிதியுதவி யுடன் மீளக் கட்டப்பட்ட மார்பு நோய் சிகிச்சை நிலையமும் பிராந் திய மருநதுக் களஞ்சியமும்- இன்று பிற்பகல் 2மணிக்கு விழாவின பிர தம விருந்தினரும் உலகவங்கியின் சிரேஷ்ட செயற்பாட்டு அதி காரியுமான கலாநிதி என்.துரைசுவாமியினால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக வடக்கு கிழக்கு மாகாண சபை பிரதிப்பிரதம செயலாளர் (நிதி) கே.மகாலிங்கமும் வடக்கு- கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் கலாநிதி எஸ்.குமாரவேற் பிள்ளையும் யாழ்.அரச அதிபர் கே.கணேஷும் கலந்துகொள்ளவுள் ளனர். (து)



**பெண்கள் பண்பாட்டு மையத்தினரால் நடாத்தப்பட்டுவரும் அரங்கா லயம் நிகழ்வில் 12ஆவது நிகழ்வு கடந்த 24ஆம் திகதி யாழ்.கந்தர் மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பங்குகொண்ட செயலாளிகள் பொங்குதமிழ் 2005 தொடர்பான எழுச்சி யில் தமிழீழ அரசை அங்கீகரிக்க கோரி கோசமிடுவதை படத்தில் காணலாம்.**

# இராசி பலன்

**28.9.2005**
**(புரட்டாதி12 ,புதன்கிழமை)**
**பூசம் முன்னிரவு 7.33 மணிவரை**
**தசமி காலை 7.40 மணிவரை**
**இராகுகாலம் 12.02 - 01.32 மணிவரை**
**சுபநேரம் 04.32 -06.02 மணிவரை**
**சித்தயோகம்**

- **மேடம்:** தொழில் நன்மை, எடுத்த காரியம் கை கூடும், தனலாபம், சுபசெய்தி.
- **இடபம்:** வியாபார சிந்தை, கௌரவக் குறைவு, முயற்சி தாமதம், ரோகநிலை.
- **மிதுனம்:** கல்வியில் ஆர்வம், பெரியோர் சந்திப்பு, காரிய தாமதம், பயந்த சுபாவம்.
- **கடகம்:** இனிய அனுபவம், கூட்டு முயற்சி, வாக்கு மேன்மை, போசன சுகம்.
- **சிங்கம்:** மதிப்புக் குறைவு, உஷ்ண வியாதி, காரிய தாமதம், பொருள் விரயம்.
- **கன்னி:** நல்ல முயற்சி, தெய்வ சிந்தை, நண்பர்கள் உதவி, பிரயாணம்.
- **துலாம்:** பிதா சிந்தை, சுபசெலவு, உணர்ச்சி வசப் படுதல், காரிய தாமதம்.
- **விருச்சிகம்:** தொழில் சிந்தை, சகோதரர் உதவி, போசன சுகம், கீர்த்தி.
- **தனுசு:** அதிகாரம், நல்ல செய்தி, போசன சுகம், நிலைமாற்றம்.
- **மகரம்:** புதிய முயற்சி, இடமாற்றம், சரீரப் பிரயாசை, கட்டுப்பாடு.
- **கும்பம்:** மரியாதைக்குறைவு, வேலைச் சுமை, பிரயாண பயம், கலகம்.
- **மீனம்:** களஸ்திர நன்மை, பகைவர் நேசம், பெருமையடைதல், காரிய சித்தி.

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**

**வளவன்**

### தமிழர்களின் பிரச்சினைகளுக்கு

# அமைதி வழியிலான தீர்வு காண்பதே எமது நிலைப்பாடு

(கொழும்பு)

தமிழ் மக்கள் பல்லாண்டு காலமாக எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணுவதற்கு தமிழீழ விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் உடனடியாக பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டுமென இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப் பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் கடந்த ஞாயிறன்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு அமைதி வழியில், பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

தமிழ்த்தேசிய எழுச்சிப்பேரணிகள் மூலம் தமிழ் மக்களின் உணர்வலைகள் சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்படவேண்டும்.

கடந்த மூன்றரை வருடங்களாக போர்நிறுத்த உடன்படிக்கை அமுலில் உள்ள போதிலும் அத னால் எதுவித பயன்பாடும் கிட்டவில்லை.

அவசரகால சட்டம் அமுல்படுத்தப்பட்டதன் காரண மாக தென்னிலங்கையில் வாழும் தமிழ் மக்கள் கைது செய்யப்படுவது அதிகரித்துள்ளது எனவும் மேலும் தெரிவித்தார். (த-9)

# 20 ஆவது ஆண்டு நிறைவு விழா

(வடமராட்சி)

வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகத்தின் 20ஆவது ஆண்டு நிறைவு விழா அடுத்த மாதம் 1ஆம், 2ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

முதலாந் திகதி மாலை 4.30மணி தொடக்கம் 6.00 மணிவரை அல்வாய் மாலுசந்தி பிள்ளையார் ஆலயத்தில் சமய நிகழ்வுகள் இடம்பெறும்.

ஏனைய நிகழ்வுகள் மறுநாள் முற்பகல் 9.00மணி தொடக்கம் 1.00 மணிவரை அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் கழகத் தலைவர் சி.குலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் மகளிர் விவகார அமைச்சு செயலாளர், வி.செ.சுவாமிநாதன் கலந்துகொள்ளவுள் ளார்.

சிறப்பு நிகழ்வாக 20ஆவது ஆண்டு மலர் வெளி யீட்டுவிழா இடம்பெறவுள்ளது.

மலர் வெளியீட்டுரையை யாழ்.செயலக கணக் காய்வு அத்தியட்சர் எஸ்.கனகசிங்கமும், மலர் ஆய்வுரையை ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி சட்டத் தரணி விகடகவி மு.திருநாவுக்கரசும் வழங்கவுள் ளனர். (த-7)

# ஆயிரமாவது வீடு கையளிப்பு

சுனாமி அகதிகளுக்கு 1558 இடை நிலைத்தன்மையுடைய வீடுகளை அமைத்துவரும் ஐக் கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தின் (UN HER) யாழ்ப்பாண அலுவலகம் கற்கோவளம் புனித நகரில் பூர்த் தியாக்கப்பட்ட ஆயிரமாவது வீட் டைப் பயனாளியொருவருக்குக் கையளிக்கும் விழாவை இன்று புதன்கிழமை முற்பகல் 11மணிக்கு நடாத்தவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செய லர் ஆர்.வரதீஸ்வரன் தலைமை யில் நடைபெறும் இவ்விழாவில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானி கராலயத்தின் வதிவிடப் பிரதிநிதி திருமதி மஸ்ரி கொட்ஸ், ஜப்பான் தூதராலய பிரதி தலைமையதி காரி திருமதி கருபி ஐக்கிய நாடு களின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தின் யாழ்ப்பாணக் காரியாலய தலைமை அதிகாரி அக்ரன் ராகாயும் கலந்துகொள்கி றார்கள்.

யாழ்மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், கடலனர்த்த நடவடிக்கைச் செயலணிப் பொறுப்பாளர், பருத் தித்துறை பிரதேச செயலர் ஊழி யர்கள் மற்றும் கற்கோவளம் கிராம அலுவலர் ஆகியோர் விருந்தினர் களாகக் கலந்துகொள்வார்கள்.

மேற்படி 1558வீடமைக்கும் திட் ட்த்தின் கீழ் மணற்காட்டில் 210 வீடுகளும், கற்கோவளத்தில் 111 வீடுகளும், பொற்பதியில் 93 வீடு களும், புனிதநகரில் 139வீடு களும், குடத்தனையில் 35வீடு களும், முனையில் 30வீடுகளும் அமைக்கப்பட்டு வருகிறது.

மேலும் போரினால் பாதிக்கப் பட்டவர்களுக்கு சங்கானை பிர தேச செலயலர் பிரிவில் 276வீடு களும், சண்டிலிப்பாயில் 72வீடு களும், தெல்லிப்பழையில் 308வீடு களும், உடுவிலில் 92 வீடுகளும், கோப்பாயில் 37வீடுகளும், மண் டைதீவில் 145 வீடுகளும், யாழ்ப் பாணத்தில் 10வீடுகளும் அமைக் கப்பட்டு வருவது குறிப்பிடத்தக் கது.

இவ் வீடுகள் ஒவ்வொன்றும் எழு பதாயிரம் ரூபா பெறுமதி வாய்ந் தவை. (து)

# தமிழர் தாயகத்தை சர்வதேசம் அங்கீகரிக்கும் காலம் வந்துவிட்டது



**மாவை சேனாதிராஜா**
பராளுமன்ற உறுப்பினர்

இலங்கையில் தமிழர் தேசத்தில் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்சிகள் நடைபெற்றுவருகின்றன. தமிழ்த்தேச மக்களின் இதயதாகத்தை வெளிப்படுத்தி வவுனியாவில் மீண்டும் சுதந்திரப்பிரகடனம். அதைத் தொடர்ந்து மட்டக்களப்பில், கிளிநொச்சியில், முல்லைத்தீவில் தொடர்ச்சியாக எழுச்சிப் பிரகடனம் உலகத்திற்கு எடுத்துக்காட்டப்பட்டது.

மன்னாரில் இன்றும் அடுத்து யாழ்ப்பாணத்தில் 30ஆம் திகதியும் தமிழர் தாகம் சுதந்திரப்பிரகடனமாய் பொங்கி எழவுள்ளது.

17 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் (1619 இல்) யாழ்ப்பாண அரசு ஐரோப்பியரிடம் போரிலே தன் சுதந்திரத்தை இழந்தது.

19 ஆம் நூற்றாண்டின் (1811) ஆரம்பத்தில் வன்னியரசு ஐரோப்பியர்களுடனான போரிலே தன் சுதந்திரத்தை இழந்தது.

அதுவரை தெற்கில் சிங்கள அரசுகளும், வடக்கில் தமிழ் அரசுகளுமே ஆட்சியிலிருந்தமை வரலாறு. ஆங்கிலேயர் தம் ஆட்சி நிர்வாக வசதியின் பொருட்டு 1833இல் தாம் கைப்பற்றிய சிங்கள அரசுகளையும், தமிழ் அரசுகளையும் ஓர் ஆட்சி நிர்வாகத்தில் ஒற்றையாட்சியில் இணைத்தனர்.

இன்றிருக்கும் இலங்கையின் பின்னணி இதுதான்.

1948 இல் இலங்கைக்கு சுதந்திரம் என்பது சிங்களவருக்கே வாய்ப்பாய் அமைந்துவிட்டது. ஆனால் யாழ்ப்பாண மக்களோ, வன்னிமக்களோ தமக்கு உரித்தான இறைமையை - அரசு உரிமையை ஐரோப்பியரிடமோ, சிங்களவரிடமோ இழக்கவில்லை.

ஏனெனில் இறைமை என்றும் மக்களிடமே இருக்கிறது. கடந்த 400 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்த் தேசிய இனத்தின் நிலைப்பாடு இதுதான்.

மேலும் டொனமூர் அரசியல் திட்டத்தையோ அல்லது சிங்கள ஆட்சிகளினால் உருவாக்கப்பட்ட எந்த அரசியல் அமைப்பையோ ஒற்றையாட்சி முறையையோ, இலங்கை ஓரே அரசு, ஓரே நாடு என்ற கொள்கையையோ தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவுமில்லை. அதற்கு சம்மதம் கொடுக்கவுமில்லை.

இதன் பின்னணியில் இறைமை கொண்ட தமிழ்மக்கள் ஐரோப்பியரிடம் இழந்த ஆட்சி உரிமையை மீட்பதற்கு உரித்துடையவர்கள்.

ஐ.நா. மற்றும் சர்வதேச மாநாட்டுத் தீர்மானங்களினால் நாம் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில், நாம் சுய நிர்ணய உரிமையுடைய மக்கள். எங்கள் அரசியல் எதிர்காலத்தை நாமே தீர்மானித்து நிலைநாட்டும் உரிமையுடையவர்கள்.

அதற்கு மேலாக அண்மைக்காலங்களில் கனடா நாட்டு சமஷ்டி நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படியும், தமிழ்த்தேசிய இனம் உள்ளக சுயநிர்ணய உரிமையை கொண்டு தன்னாட்சி உரிமையை நிலைநாட்டவும்,

அவ்வாறு இல்லையெனில் வெளிச் சுயநிர்ணய உரிமையைப் பாவித்து தம் சுதந்திர உரிமையை நிலைநாட்டவும் உரிமையுடைய மக்கள் கூட்டமாகவுள்ளனர்.

மறுபக்கத்தில் ஒரு தேசம் என்று சொல்லப்படும் அரசுக்குள் போரின் மூலமாகமோ வேறு வல்லாண்மை வழிகளிலோ நீடித்து நிலைநாட்டி நிற்கின்றதும், எல்லைவரம்புகளைக் கொண்டதுமான ஆட்சிநிர்வாகத்தைக் கொண்டிருக்கும் ஆட்புலத்தை ஒப்பந்தங்களினாலோ, அரசியல் தீர்வுகளினாலோ சர்வதேசத்தினால் அங்கீகரிக்கப்படும் நிலையை எட்டியுள்ளோம்.

போர்நிறுத்த உடன்படிக்கையினால் ஏற்பட்டுள்ள களநிலை இதுதான். தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ வல்லாண்மைப் பலத்தினாலும், அளப்பரிய உயிர்த் தியாகங்களினாலும், திட சங்கர்ப்பத்தினாலும், பக்குவமான இராஜதந்திரத்தினாலும் 2002 பெப்ரவரி 22 ஆம் நாள் சிறிலங்கா அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தம் தமிழ்த் தேச மக்களின் போராட்ட வரலாற்றில் ஒரு புதிய பரிமாணத்தையும், திருப்புமுனையையும் ஏற்படுத்தி நிற்கிறது.

இந்நிலையை மேம்படுத்துவது அவசியமாகும். அதாவது 1920களில் கண்டிய இளைஞர் சம்மேளனத்தினாலும், கண்டியத் தலைவர்களாலும் டொனமூர் ஆணைக்குழுமுன் விதந்துரைக்கப்பட்ட இணைப்பாட்சித் திட்டம் முதல் 1950களில் தமிழரசுக்கட்சியின் திருமலை மாநாட்டுத் தீர்மானங்கள், 1957இல் பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம், 1965இல் டட்லி - செல்வா ஒப்பந்தம், 1976 வட்டுக்கோட்டைத் தீர்மானம், 1977 பொதுத் தேர்தலில் தமிழ்த்தேச மக்களின் ஆணை, 1985 திம்புக் கோட்பாடுகள், 1987இல் இந்திய - இலங்கை ஒப்பந்தம், 1995இல் சந்திரிகா குமாரதுங்கவின் அதிகாரப்பகிர்வுத் திட்டம் இவையெல்லாம் தமிழ்த் தேசியத்தின் தனித்துவமான அடையாளத்தையும், தமிழ்த் தேசியத்தின் அடித்தளமாகியுள்ள தமிழர் பாரம்பரிய தாயகத்தையும், தமிழ்த் தேசிய இனத்திற்கு உரித்தான தன்னாட்சி உரிமையையும் அங்கீகரித்து நிற்கின்றன.

2002இல் போர்நிறுத்த உடன்படிக்கையின் மூலம் தமிழ்த்தேச மக்களின் ஆட்சி நிர்வாகக் கட்டமைப்பும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய தமிழர் தாயகப் பிரதேசங்கள் சிங்களதேச அரசின் இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதும், உயர்பாதுகாப்பு வலயம் என்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுமான பிரதேசங்கள் மீட்கப்படவேண்டியுள்ளது.

போர்நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் தாய்லாந்திலும், ஒஸ்லோவிலும் ரோக்கியோவிலும், வாஷிங்டனிலும் சர்வதேச நாடுகளின் மாநாட்டுத் தீர்மானங்களும், அண்மையில் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களும் தமிழ்த்தேச மக்களின் போராட்டத்தின் நியாயத்தையும், இணைப்பாட்சி அடிப்படையில் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணவேண்டுமென்பதையும் வலியுறுத்தி நிற்கின்றன.

ஆனால் அண்மைக்காலத்திலும் சிங்கள தேசத்தின் ஜனாதிபதித் தேர்தலிலும் அதிகாரவெறி, மீண்டும் கற்காலத்தினை நோக்கியதாய் சிங்கள - பௌத்தவாதப் பேரலையைக் கொண்டுவருகிறது.

பயங்கரவாதம் எனும் பெயரில் தமிழ்த் தேச மக்களின் போராட்டத்தை அடக்கி ஒடுக்கி தமிழ்த் தேச இனத்தையே பூண்டோடு அழித்து ஒழித்துவிடும் அரச பயங்கரவாதத்தை எழுச்சிகொள்ளச்செய்யும் வியூகங்கள் சர்வதேச தேசத்திலும் கொழுந்துவிடுகின்றன.

போர்நிறுத்த காலத்தைப் பயன்படுத்தி தமிழ்த்தேசத்தில் விரோத சக்திகளை ஊடுருவச் செய்து மக்களிடையே பிளவையும், கலாசார சீர்குலைவுகளையும் ஊக்கப்படுத்திவருவதிலும், தமிழர் தேசப் பாதுகாப்பு அரணைப் பலவீனப்படுத்துவதிலும் பேரினவாத சக்திகள் தீவிரம் கொண்டுள்ளன.

மறுபுறத்தில் தமிழ்க்குழுக்களை துணைப்படைகளாக வளர்த்து போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறுவது மட்டுமல்லாமல், தமிழர் தாயகத்திலிருந்து தென் தமிழீழமான கிழக்கைப் பிரித்துவிடவும் பாரிய சூழ்ச்சிகளை பேரினவாத சக்திகளும், இராணுவத்தினரும் பயன்படுத்தி வருவதையும் காண்கிறோம்.

400 ஆண்டுகள் நீடித்த அடிமைத் தளையை அகற்றி, இழந்த சுதந்திரத்தை மீட்டு தமிழர் தேசத்தில் சுதந்திர ஆட்சியினை நிலைநாட்டும் தமிழர் பேராட்ட வரலாற்றில், கடந்த 50 ஆண்டுகளில் - அண்மைக்காலங்களில் தமிழ்த் தேச மக்களின் போராட்டம் பெற்றிருக்கின்ற பாரிய வளர்ச்சியை, இதற்காக தமிழ் மக்களும், போராளிகளும் செய்த அளப்பரிய தியாகத்தை இழப்போமா?

சிங்களப் பேரினவாதத்திற்கும், தமிழ் தேசவிரோதிகளின் சூழ்ச்சிகளுக்கும் பலியாகிவிடுவோமா?

எனவேதான் தமிழ்த் தேசிய இனத்தினை அழித்துவிடும் அரச மற்றும் வெளிசக்திகளின் பயங்கரவாதத்திற்கு எதிராக தமிழ்த்தேச மக்கள் விழிப்படையவேண்டும், எழுச்சிகொள்ளவேண்டும், விடுதலைப் போராட்டதில் பங்காளிகளாக இணைந்துகொண்டு ஜனநாயகக் கடமையை நிறைவேற்றவேண்டுமென அழைப்பு விடுக்கின்றோம்.

தமிழ்த் தேசத்தின் இளம்சமுதாயம் பல்கலைக்கழக மாணவ சமுதாயம் செப்ரெம்பர் மாதம் 30 ஆம் நாள் ஏற்பாடு செய்துள்ள பொங்குதமிழ் நிகழ்ச்சியில் அணிதிரள்வோம்.

எங்கள் இதய தாகத்தையும், சுதந்திர மூச்சையும், விடுதலைக் குரலையும் உரக்க - உறுதியாய் உலகுக்குச் சொல்வோம் வாருங்கள்.

## நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளராக கே.வி.குணசேகரம் இன்று நியமனம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கோட்ட கல்விப் பணிப்பாளராக கோப்பாய் நாவலர் வித்தியாலய அதிபர் கே.வி.குணசேகரம் வடக்குக் கிழக்கு மாகாண கல்வியமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இன்று பதவியேற்கவுள்ளார்.



கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தில் 16 ஆண்டுகள் அதிபராகக் கடமையாற்றிய இவர் காலத்தில் பாடசாலை பல துறைகளிலும் வளர்ச்சிகண்டிருந்தது.

ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளரான கே.வி.குணசேகரம், 1998 ஆம் ஆண்டு வீரகேசரி நடத்திய அகில இலங்கை நாவல் போட்டியில் அவிழாத முடிச்சுக்கள் என்ற நாவலை எழுதி முதற் பரிசு பெற்றார்.

இவரது சிறுவர்களுக்கான ஆத்திசூடிக் கதைகள் மலேசியாவில் உலகத்தமிழ் சைவ மாநாட்டில் வெளியிடப்பட்டன.

720 குறட்பாக்களுக்கு இவர் எழுதிய திருக்குறள் கதைகள் 11 புத்தகங்களாக வெளியாகியுள்ளன.

வலம்புரியின் ஆரம்பகாலம் தொடக்கம் இவரது ஆக்கங்கள் வெளிவந்து பலரது பாராட்டையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (து)




## விண்வெளிச் செய்திகள்

- துணைக் கிரகம் இல்லாத கோள்கள் ?
  **வீனஸ், மெர்க்குரி**
- மிராண்டா என்பது எந்தக் கிரகத்தின் துணைக் கிரகம்?
  **யுரேனஸ்**
- பால்வெளி வீதியில் எத்தனை சூரியன்கள் இருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்?
  **10 ஆயிரம்**
- ரோமானியர்கள் 'வர்த்தக கடவுள்' என்று எந்தக் கிரகத்தை அழைத்தனர்?
  **மெர்க்குரி**
- சூரியனுக்கு அடுத்து வானவெளியில் அதிகமான ஒளியை வீசுவது?
  **நிலவு**
- செவ்வாய்க்கிரகத்திற்கு முதன் முதலாக அனுப்பிவைக்கப்பட்ட விண்கலம்?
  **மரினர் - 4**
- இரண்டாவது மிகப் பெரிய கிரகம்?
  **சனி**
- யுரேனஸ் கிரகத்தைக் கண்டுபிடித்தவர்?
  **வில்லியம் ஹெர்செல்**
- மிகச் சிறிய கிரகம் எது தெரியுமா?
  **புளூட்டோ**
- வால் நட்சத்திரங்களில் மிகவும் பிரபலமானது?
  **ஹாலி வால் நட்சத்திரம்**

சொ.நித்தியா, கொக்குவில்.

## அவை காட்டும் வழி

சிற்றெறும்பு சேர்ந்து சேர்ந்து
உணவைக் காவிச் செல்லுது
தேசம் வாழ நாமும் கூடிச்
சேர்ந்து சேவை செய்குவோம்

தேனீக் கூட்டம் தமது வேலை
தம்மைப் பங்கு போட்டுமே
திறமை யாகச் செய்வதை நாம்
தினமும் பார்க்க வில்லையா?

காகம் தமக்குக் கிடைக்கும்
உணவைத்
தனித்தே யுண்பதில்லையே



காகா என்று கரைந்து கரைந்து
கனிகொண் டுணவை யுண்ணுமே

தனக்கு உணவு தந்த வர்க்காய்த்
தனது உயிரைத் தானுமே
கொடுக்கும் நன்றிக் குணம தனைக்
கொண்ட நாயைக் கண்டோமே

– சரவணபவன்

## குறுகிய பாதை



கடுமையான வெயில் காலத்தில் ஒருமுறை பேரரசர் அக்பர் நீண்ட தூரத்திற்குப் பயணம் செய்ய வேண்டியிருந்தது. அவர் ஒரு பல்லக்கில் பயணம் செய்தார். அவரது மந்திரிமார்களும் அக்பரைப் பின் தொடர்ந்து சென்றனர். அங்கே பீர்பாலும் இருந்தார்.

அக்பருக்குப் பயண தூரம் அதிகமாக இருப்பது போலத் தோன்றியது. வெயிலின் கடுமையால் அவருக்கு வியர்த்துக் கொட்டியது. அதனால் கடுப்பான அவர்,

"இந்தச்சாலையில் இன்னும் எவ்வளவு தூரம் பயணம் செய்ய வேண்டும்...? இந்த இடத்துக்குப் போக குறுக்குவழி எதுவுமே இல்லையா...? உங்களில் யாருக்காவது குறுக்கு வழிப் பாதை தெரியுமா?" என்று நொந்துபோய்க் கேட்டார்.

அக்பருடன் வந்தவர்களில் யாரும் பதில் பேசவில்லை. ஏனெனில் அந்த இடத்திற்குப் போக குறுக்குவழி எதுவும் கிடையாது என்பது அவர்களுக்குத் தெரியும். அது செங்குத்தான மலைப்பாதை வேறு.

ஆனால் பீர்பால் மட்டும் "எனக்கு குறுக்குவழி தெரியும்" என்றார் துணிச்சலாக.

அவரை மற்ற மந்திரிகள் வியப்பாகப் பார்த்தனர். இது எப்படிச் சாத்தியமாகும்? என்று ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

அப்போது அக்பர் பீர்பாலிடம் "என்ன உங்களுக்கு இந்தப் பாதை குறுக்குவழி தெரியுமா...?. எங்கே சொல்லுங்கள் பார்க்கலாம்" என்றார்.

"நிச்சயம் சொல்கிறேன். அதற்கு முன்பாக நான் ஒரு கதை சொல்கிறேன். அதைக் கேளுங்கள்" என்ற பீர்பால், உடனே ஒரு சுவாரஸ்யமான கதையைக் கூறத் தொடங்கிவிட்டார். அக்பரும் மற்றவர்களும் அதை ஆவலாகக் கேட்டுக்கொண்டே வந்தனர். பல்லக்கைத் தூக்கியவர்களோ பீர்பாலின் கதையைக் கேட்கும் ஆர்வத்தால் நடையைத் துரிதமாக்கினார்கள். பீர்பால் கதையைக் கூறி முடித்தபோது அக்பர் செல்ல வேண்டிய தொலைவை அடைந்து விட்டார்.

"என்ன நாம் சேரவேண்டிய இடம் இவ்வளவு சீக்கிரத்தில் வந்து விட்டதா?" என்று ஆச்சரியத்தோடு பீர்பாலைப் பார்த்தார் அக்பர்.

பீர்பாலோ சிரித்துக்கொண்டே "மா மன்னா! நீங்கள் தானே இந்த இடத்துக்கு ஏதாவது குறுக்குவழி இருக்கிறதா என்று கேட்டீர்கள். உண்மையில் இங்கே குறுக்குவழி எதுவும் இல்லை. கதை சுவாரஸ்சியம்தான் அத்தனை பேரையும் சுறுசுறுப்பாக இயங்கவைத்து விரைவாக இங்கே உங்களை கொண்டுவந்து சேரவைத்துவிட்டது" என்றார்.

## ஆயிரம் மடங்கு இனிப்பு

உலகிலேயே மிக இனிப்பான பொருள் டாலீம் புரோட்டீன்தான். சர்க்கரை ஒரு மடங்கு இனிப் பென்றால் சக்கிரீன் 20 மடங்கு இனிப்பாகும்.

அதைப்போல் டாலீம் புரோட்டீன் ஆயிரம் மடங்கு இனிப்புக் கொண்டதாகும்.

## விடுகதைகள்

1. ஓங்கி வளர்ந்தவன் தாகம் தீர்ப்பான் அவன் யார்?
2. சின்ன நடை நடந்து தூரம் போவான் அவன் யார்?
3. நான் சொன்னதை அவனும் சொன்னான் ஆனால் நாங்கள் இருவரும் வேறு வேறு நாங்கள் யார்?
4. ஒருவனுக்கு ஒன்பது கைகள் அவன் யார்?
5. பார்த்தால் கல் பல் பட்டால் தண்ணீர் அது என்ன?
6. காலில்லை வாலுண்டு பறப்பான் வெகுதூரம் அவன் யார்?
7. குடை பிடிப்பான் மழைக்கல்ல அவன் யார்?
8. கொம்புள்ளவன் ஆனால் வம்பில்லாதவன் அவன் யார்?
9. பஞ்சைத் தின்றவன் படுத்தே கிடக்கிறான் அது என்ன?
10. இது இரவு மட்டும் கூடும் சபை அது என்ன ?

1.தென்னை இளநீர் 2.நத்தை
3.எதிரொலி 4.மரம் 5.பனிக்கட்டி
6.பட்டம் 7.காளான் 8.மான்
9.தலையணை
10.வானில் நட்சத்திரங்கள்

விடைகள்

## நயாகரா அருவி!

அமெரிக்கா செல்லும் சுற்றுலாப் பயணிகள் நயாகரா அருவியைப் பார்க்காமல் வரமாட்டார்கள். அந்த அருவியில் அப்படி என்னதான் இருக்கிறது?

நயாகரா நதியின் நீளம் 48 கிலோ மீற்றர். அது இரு பெரும் நாடுகளான கனடாவையும் அமெரிக்காவையும் பிரித்து ஓடுகிறது. கனடாவின் ஆண்டோரியாவும் அமெரிக்காவின் நியூயோர்க் நகரமும் உள்ள பிரதேசத்தில் கோட் தீவில் இரு பிரிவுகளாய்ப் பிரிந்து அருவிகளாய் வீழ்கிறது.

கனடாவின் பக்கமாக விழும் அருவி 'ஹார்ஸ்ஷு' அருவி என வழங்கப்படுகிறது. அமெரிக்கா பக்கமாக விழும் அருவி நயாகரா அருவி என வழங்கப்படுகிறது.



நயாகரா அருவி 50 மீற்றர் உயரத்திலிருந்து விழுகிறது. அதன் அகலம் 300 மீற்றர் ஆகும். ஏனைய அருவிகளுக்கில்லாத ஒரு சிறப்பம்சம் அந்த நீர் அருவிக்கு இருக்கிறது. அருவிக்கு மேலிருந்தும், ஆற்றிலிருந்து கொண்டும் அருவியை



ரசிக்கலாம்.

அதாவது அருவிக்கு மேலிருந்து மலைச்சரிவின் குகைப் பக்கமாக நின்றுகொண்டு கீழ்நோக்கிப் பார்த்து அருவியை ரசிக்கலாம். நயாகராவில் செல்வதற்கு சிறு கப்பல் ஒன்று விடப்படுகிறது. 'தி மெய்டு ஆப் தி மிஸ்ட்ஸ்' என்னும் அந்தக் கப்பலில் பயணிகளை அருவிக்குப் பக்கமாய்க் கொண்டு செல்கின்றனர்.

5 மீற்றர் உயரத்திலிருந்து வெள்ளித் தகடாய் நதியில் வீழ்கின்ற அருவியின் எழிலை அருகில் இருந்து காணலாம். அப்போது ஏற்படுகின்ற இன்பத்தை நேரில் சென்று அனுபவிப்பவர்தான் உணர முடியும்!

'ஜூலி பிளாண்டின்' என்னும் ஸ்டண்ட் மனிதர் தடித்த கயிற்றின் மேல் நடந்து நயாகரா அருவியைக் கடந்து சென்றார். அதைப் போல பல பேர் நயாகரா அருவியைக் கடப்பதற்கு முயன்றனர். ஆனால் அவருள் ஒருவர் கூட உயிர் பிழைக்கவில்லை. ஏன்? நீர்ச்சுழலில் சிக்கிய அவர்கள் உடல்கள் கூட கிடைக்கவில்லை. இங்கிலீஷ் கால்வாயை முதன் முதலாகக் கடந்து வெற்றிவாகை சூடி உலகப் புகழ்பெற்றவர் காப்டன் மாத்யூ வெப் என்பவர். அவர் நயாகரா அருவியின் சுழலைக் கடப்பதற்கு முயற்சி செய்தார்.

அவர் எட்டு நிமிடங்கள் நீர்ச்சுழலோடு போராடினார். இறுதியில் தோல்வியுற்று கைகளை உயரத் தூக்கி அபயக்குரல் எழுப்பினார். அவரைக் காப்பாற்ற முனைந்தனர். ஆனால் அவர் உடல் சுழலில் சிக்குண்டு அடித்துச் செல்லப்பட்டது. அவரது உடலைக் கடைசிவரை கண்டுபிடிக்க முடியாமலே போயிற்று!

இன்று உலக அதிசயங்களுள் ஒன்றெனக் கருதப்படும் இந்த நயாகரா அருவி பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பின்பு முழு அமைதி பெற்று ஒரு சாதாரண நதியாக ஓடும் என்று அறிவுலக மேதைகள் விஞ்ஞான ரீதியில் கணக்கிட்டுக் கூறுகின்றனர். இவற்றை எல்லாம் படைத்த அந்த ஷக்திக்குத்தான் உண்மை தெரியும்.

## உங்களுக்குத் தெரியுமா?

- 1928ஆம் ஆண்டு அலெக்ஸாண்டர் ஃபிளெமிங் பென்சிலின் மருந்தைக் கண்டுபிடித்தார்.
- டைனமோவைக் கண்டுபிடித்தவர் மைக்கெல் ஃபரடே.
- சர்வதேச பொலிஸ் அமைப்பு இன்டர் போல் என்று அழைக்கப்படுகிறது.
- பறவை உலகில் மிக வயதானது ஃபால்கன் பறவை தான். இவை அதிகபட்சம் 150 ஆண்டுகள் வரை வாழ்கின்றன.
- உலகில் மிருகங்களிலேயே குதிரையைப் பற்றித்தான் நிறைய புத்தகங்கள் வந்துள்ளன.

### நாய்க்கு சீசன் டிக்கெட்

நெதர்லாந்தின் ஹேக் நகரில் நாய்கள் பஸ்ஸில் செல்ல சீசன் டிக்கெட் வழங்கப்படுகிறது! நாயின் புகைப்படத்துடன் அதன் பெயர், எஜமானின் பெயர், அதன் விவரங்கள் சீசன் டிக்கெட்டில் இருக்குமாம். இதெப்படி இருக்கு.


### வயது தடையல்ல

ஓய்வு பெற்ற விமானி ஜார்ஜ் புருன் ஸ்டேட் தன் 70 ஆவது வயதில் பத்து மைல் தூரம் கொண்ட ஆங்கில கால்வாயை 15 மணி 59 நிமிடங்களில் இவர் நீந்திக் கடந்தார்.

இதற்கு முன்பு 1987ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த 67 வயது பெர்பராம்பாட் என்பவர் செய்திருந்த சாதனையை இதன்மூலம் இவர் முறியடித்தார்.

# இராணுவத்தினர் நடாத்திய இலவச மருத்துவ சேவை







(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் 51 ஆவது சேனையகத்திற்கு உட்பட்ட 513ஆவது படை யணியின கீழ் உள்ள தெல் லிப்பழை, மல்லாகம், அள வெட்டி மற்றும் 513ஆவது படையணிக்குட்பட்ட யோக புரம், செல்வபுரம் போன்ற கிராமத்தில வசிக்கும் வறிய மக்களின் நன்மை கருதி கடந்த 24ஆம் திகதி காலை இலவச மருத்துவ சேவை நடத்தப்பட்டதாக பலாலி பாதுகாப்பு நடவடிக்கை தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரி விக்கப்பட்டுள்ளது.

மேலும் 55ஆவது சேனை யகத்தின் கீழ் உள்ள 516 ஆவது படையணியின் கீழ் உள்ள எழுதுமட்டுவாள் வடக்கு, எழுதுமட்டுவாள் தெற்கு, உடுப்பேலி, மிருசுவில் போன்ற பகுதியில வசிக்கும் மக்களின் நன்மை கருதி 25ஆம் திகதி காலை இலவச மருத் துவ சேவையும் நடத்தப்பட்டுள்ளது. 513ஆவது படையணியின் கீழ் உள்ள கிராமங்களில இருந்து 150 நோயாளர்களும் 511ஆவது படையணிக்கு உட பட்ட பகுதியில் உள்ள கிராமங்களில் இருந்து 400நோயாளிகளும் 516 ஆவது படையணிக்குட்பட்ட பகுதியில் இருந்து 200 நோயாளர்களும் இம் மருத்துவ சேவையில் கலந்துகொண்டு சிகிச்சை பெற்றுப் பயனடைந்தனர்.

இந்த இலவச சிகிச்சை முகாம் யோகபுரம் முன்பள்ளி பாடசாலை, தெல் லிப்பழை மாவட்ட வைத்தியசாலை, உடுப்பேலி சனசமூக நிலையம் ஆகிய இடங்களில் நடத்தப்பட்டன. தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையின வைத்திய அதிகாரி எஸ். சிவராணி 513ஆவது படைப்பிரிவின் கீழ் நடாத்தப்பட்ட மருத்துவ முகாமில் கலந்துகொண்டதுடன் இந்த இலவச முகாமில் இராணுவ வைத்தியசாலையைச் சேர்ந்த சுமார் 10 வைத்தியர்களும் கலந்து கொண் டனர்.

513ஆவது படையணிக்குட்பட்ட பகுதியில் உள்ள நலன்புரி முகாம்களில இருநது சகிச்சை பெறுவதற்காக அழைத்து வந்திருந்த சிறார்களுக்கு உண வுப்பொருட்களும் ,விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டதுடன் 516 ஆவது படையணிக்குட்பட்ட பகுதியில் இருந்து கலந்துகொண்ட கிராம மக்க ளுக்கு படையணித்தலைமையகத்தினால் பெருந்தொகையான உலர் உணவுப்பொருட்கள் அடங்கிய பொதிகளும் வழங்கப்பட்டன.

குறிப்பாக மேற்படி கிராமங்களில் வறிய மக்களே கூடுதலாக வசித்துவரு வதுடன் இவர்களில் பலர் போதிய ஊட்டச்சத்து(விற்றமின்கள்) இல்லாத கார ணத்தினால் வலது குறைந்தவர்களாகவும், ஊக்கமற்றவர்களாகவும் கிரிமி நோய்த்தாக்கத்திற்கு உட்பட்டவர்களாகவும் இருந்தனர். இந்த நிலைமையை 51மற்றும் 56 ஆவது சேனையகத் தளபதி யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.ரி. தென்னக்கோனுக்கு விளக்கியதன் பிரதிபலனாக இந்த இலவச மருத்துவ சிகிச்சை முகாம் நடத்தப்பட்டது.

வறிய மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை யாழ். மாவட்ட இராணுவ வத்தளபதி இராணுவ வைத்திய சேவையின் பணிப்பாளரிடம் எடுத்துக் கூறிய பின்பு இநத இலவச முகாமை நடத்துவதற்கு தேவையான மருந்துப் பொருட் களும்,நோய்த்தடுப்பு என்பன்வும் பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

இந்த மருத்துவமுகாம் ஊடாக நோய்த்தடுப்பு மருந்து, நோய்தடுப்பூசி, சிறுவர் களுக்கான உணவுப்பொருட்கள், சிறுவர் விளையாட்டுப்பொருட்கள், பால்மா வகைகள் மற்றும் போஷாக்கு அடங்கிய உணவுப்பொருட்கள் என்பனவற்றை பாதிக்கபபட்ட மக்களுக்கு வழங்கும்படி இராணுவ மகளிர் பிரிவினர் அன் பளிப்புச செய்திருந்தனர். இவ்வாறான கஷ்டப்பிரதேசங்களில வசிக்கும் மக்களின் நலன்கருதி சுமார் 6 மாதத்திற்கு ஒரு தடவை இவ்வாறான இலவச மருத்துவ முகாம்களை நடத்த இராணுவததினர் திட்டமிட்டுள்ளதுடன் இவ் வாறு இலவச மருத்துவ முகாம்களை நடத்தியமை குறித்தும் பிரதேச மக் கள் இராணுவத்தினருக்கு நன்றி தெரிவித்துள்ளனர் என அச்செய்திக் குறிப் பில் மேலும தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# திருநெல்வேலி சந்தைச் சுற்றாடலில் பெரும் சுகாதாரச் சீர்கேடுகள்

## உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிச் சந்தைக் கட்ட டங்களிலும் அவற்றின் சுற்றாட ல்களிலும் காணப்படும் வசதிக் குறை வினால் இப் பகுதி மக்கள் பெரும் பிரச்சினைகளையும் சுகாதார சீர் கேடுகளையும் எதிர்நோக்கி வருகின் றனர். இது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு திருநெல்வேலி மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் நல்லூர் பிரதேச சபையிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளது.

சந்தையிலிருந்தும் கடைகளி லிருந்தும் அவற்றின் சுற்றாடலிலி லும் வீதி ஓரங்களிலும் வீசப்படும் சேதன அசேதன கழிவுப் பொருட்கள் உரிய நேரங்களில் துப்புரவு செய்யப் படாது தேங்கி அழுகி சுற்றுப் புறச் சூழலை மாசடையச் செய்கின்றது. அதே நேரத்தில் வடிகால்களில் தேங் கும் கழிவுப் பொருட்களால் வெள்ள வாகால் நீர் ஒடுவதற்கு வாய்ப்பின்றி தேங்குவதால் நிலத்தடி நீர் மாசடைய வாய்ப்பாகவுள்ளது.

சந்தையின் சுற்றாடலில் உள்ள வீதி ஓரங்கள் கைஒழுங்கை ஓரங் களில் குறிப்பாக இந்து தமிழ் கல வன் பாடசாலை அமைந்துள்ள வீதி ஓரங்களிலும் அநாதரவாக சேமிக் கப்படும் குப்பை கூழங்கள், வாழை இலை, வாழைத்தண்டு, அழுகிய மரக் கறி, வெட்டப்பட்ட மீன், மிருக இறைச்சி போன்ற சந்தைக் கழிவுகள் என்பன தேங்கியுள்ளதால் அதன் சுற்றாடல் மிகமிகச் சீர்கேடு அடைவதுடன் பாட சாலையில கல்விபயிலும் பிள்ளை களின் சுகாதாரத்துக்கும் பங்கம் ஏற் படுகின்றது.

அது மட்டுமல்லாமல் பாதையின் இரு மருங்கிலும் கொட்டப்படும் கழி வுக்குவியல்களால் பாதையில் நட மாடும் பாதசாரிகளும் வாகனங்களும் இடறல் அடைந்து விபத்துக்களும் ஏற்படுகின்றன.

சந்தையைச் சூழவுள்ள வடி கால வாயக்காலின் சுவர்கள் தகுந்த முறை யில் பராமரிக்கப்படாமையினால் அவை இடிந்து தூர்ந்து போயுள்ளன. இத னால் மழைகாலங்களில் ஏற்படும் வெள்ளப்பெருக்கின் காரணமாக ஓடும் நீர் அண்மையிலுள்ள வீட்டு முற்றங்கள் வளவுகளுக்குள்ளும் பரவுகின்றது.

மேலும் வெள்ளம் காவச் செல் லும் கழிவுப்பொருட்களும வீட்டு முற் றங்கள், வளவுகளில் பரவி இவறறை அசிங்கப்படுத்துகிறது.

இது இச் சுற்றாடல் வாழ்மக் களை பல அசௌகரியங்களுக்கு உள் ளாக்குகின்றது. இச்சீர்கேடுகள் குறை பாடுகள் தொடர்பாக பல தடவை கள் தங்கள் மேலான கவனத்துக்கு இப் பகுதி மக்கள் புகார் செய்திருந் தார்கள். மற்றும் பத்திரிகை வாயி லாகவும் இது சம்பந்தமாக விமர்ச னம் செய்யப்பட்டது. பாடசாலை நிர் வாகம் பல தடவைகள் இப்பிரச் சினைகளை தங்கள் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

இது மட்டுமன்றி சமீப காலத்தில இப பகுதியில் இருந்து தங்களுக்கு முறைப்பாடு ஒன்று செய்யப்பட்ட தற்கு தாங்கள் நிதிப்பற்றாக் குறை யென காரணம் கூறினர்கள் . இதறகு சமூக அக்கறையுள்ள ஒருவர் தங் களை சந்தித்து நிக்கொட் நிறு வனத்துடன் இது குறித்துப் பேசி நிதி பெற்றுத்தருவதாகவும் கடந்த 12ஆம திகதி மாலை 3.00 மணிக்கு நிக்கொட் நிறுவன பணிப்பாளர் லங் காநேசனை தாங்கள் சந்திப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டதாகவும் கூறி யிருந்தார்.

ஆனால் தாங்கள் வருவதாக கூறி விட்டு போதிய காலநேர அவகாசம் தரப்பட்டிருந்தும் தாங்கள் இதற்குச் சமுகமளிக்கவில்லை. இதற்கான காரணமும் அறிவிக்கப்படவில்லை. சமுகமளிக்க முடியாதவிடத்து மாற்று திகதியும் அறிவிக்கப்படவில்லை. இது பற்றி தாங்கள் எதுவித நட வடிககை எடுத்ததாகவும் தெரிய வில்லை. இதனைப் பார்க்குமிடத்து தாங்கள் அசண்டையீனமாக இருப் பதாகத் தென்படுகிறது. இது சம்பந்த மாக ஆக்கபூர்வமான நடவடிக்கைமேற் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கி றோம்.

இவ்விடயம் இப்பகுதி மக்களின் பிரதான சுகாதாரப் பிரசசினையாக இருப்பதனால் இக்கோரிக்கைகளை நிறைவேற்றத் தவறும் பட்சத்தில மக்களின் கடும் எதிர்ப்பினை சம் பாதிக்க நேரிடும் என்பதனைத் தங்க ளின் தயவான கவனத்துக்கு அறியத் தருகின்றோம் என அம் மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# விண்ணப்ப முடிவுத் திகதி நீடிப்பு

(கொழும்பு)

இடம்பெயர்ந்தவர்கள் ஜனாதி பதி தேர்தலின் போது வேறு வாக் குச் சாவடிகளில் வாக்களிக்க விண் ணப்பிக்க வேண்டிய காலம் எதிர் வரும் ஒக்டோபர் மாதம் 3ஆம திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணையாளர் தயா னந்த திஸ்ஸநாயக்க தலைமையில் நேற்று முற்பகல் நடை பெற்ற கலந துரையாடலின் போதே இந்தத் தீர் மானம் எடுக்கப்பட்டதாக தோதல் செய லக உயர் அதிகாரி தெரிவித்தார்.

அடையாள அட்டை இலக்கம், கிராம சேவகரின் அத்தாட்சிக் கடி தம் இல்லாத விண்ணப்பங்கள் நிரா கரிககப்படும் என்று தேர்தல் செயல கம் அறிவித்துள்ளது.

இதேவேளை அங்ககரிக்கப்படட அரசியல் கட்சியை சேராத ஒருவா ஜனாதிபதித்தேர்தலில் சுயேட்சை யாகப் போட்டியிடுவார் ஆயின் அவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந் தார் என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று தேர்தல் ஆணை யாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

பாராளுமன்ற செயலாளர் நாய கதகின் கையொப்பத்துடன் இது உறுதி செய்யப்படவேண்டுமென்று தேர்தல் ஆணையாளர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உறுதி செய்யப்படா தவர்களின் கட்டுப்பணம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டது எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் சா்ர்பில் வேட்பு மனுத் தாக்கல் செய்யப்படுபவர்களுக்கு இது பொருநதாது என்று தேர்தல் செய லகம் குறிப்பிட்டுள்ளது.

தற்போது இலங்கையில் ஏற் றுக் கொள்ளப்பட்ட 51 அரசியல் கட் சிகள் உள்ளன.

இம்முறை ஜனாதி பதித்தேர்த லில் 13.3 மில்லியன் பேர் வாக்களிக் கத் தகுதி பெற்றுள்ளனர்.

(த-9)

# சேதுசமுத்திரத் திட்டத்துக்கு தடைவிதிக்க உச்ச நீதிமன்றம் மறுப்பு

(கொழும்பு)

கடந்த டிசம்பர் மாதம் இந்திய இலங்கை கடலோரப் பகுதிகளைத் தாககிய சுனாமிக்குப் பின் சேது சமுத் திரததிட்டம் சுற்றுச் சுழல் ரீதி யாக பாதுகாப்பானதா என்பதை மீளாய்வு செய்யும் வரை இந்தத் திடடத்திற்கு இடைக்கால தடை விதிக்க வேண் டும என்று சென்னை அமைப்பு ஒன்று தாக்கல் செய்த வழக்கில் இந்திய உச்சநீதி மன்றம் இடைக் காலத் தடை விதிக்க மறுத்துள்ளது.

இந்திய அரசு இந்த ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து சேது சமுத்திரத்திட் டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது.

அரசியல் காரணங்களை முன் னிட்டு இந்தத் திட்டத்தை உடனடியாக செயல்படுத்த மத்திய அரசு துடிப்புடன் இருக்கிறது.

சுற்றுச் சுழல் பாதிப்புக்களை கருத் திற் கொள்ளாமல் அரசு செயற்படு கின்றது. அதனால் பாதிப்புக்கள் குறித்து முழுமையாக ஆய்வு செய் யும வரை திட்டத்தை இடை நிறுத்த வேண்டும் என்று மனுதாரர் தமது மனுவில் தெரிவித்திருந்தார்.

முதலில் சென்னை உயர் நீதி மன்றத்தில் தொடுக்கப்பட்ட இந்த வழக்கை அந்த நீதிமன்றம் தள்ளுபடி செயதிருந்தது. அதனையடுத்து உச்ச நதிமன்றததில் தொடுக்கபபட்ட மேன் முறையீட்டு மனுவை விசாரித்த உச்ச சீதி மன்றம் நேற்று முன்தினம் இந்த உத்தரவை பிறப்பித்துளளது.(து-7)

# வீடுகள் புனரமைப்பு மந்தகதியில்!

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக் கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையில் இரணடு வீதமான வீடுகளே கட்டி முடிக் கப்பட்டிருப்பதாக கணக்காய்வாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஒகஸ்ட் மாதம் 4ஆம் திகதி வரை 1055 வீடுகள் மாத்திரமே கட்டி முடிக் கப்பட்டிருப்பதாக கணக்காய்வாளர் எஸ்.ஈ.மாயாதுண்ணை தொிவித்தார்.

பாராளுமன்றத்துக்கு சுனாமி நிவா ரண மறுசீரமைப்பு விவகாரம் தொடர் பாக திணைக்களம் சமர்ப்பித்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரி விக்கப்பட்டுள்ளது.

வீடுகளை அமைப்பதற்காக 75 உடன்படிக்கைகள் செய்து கொள் ளபபட்டுள்ளது. பகுதி அளவில் பாதிக்கப்பட்ட வீடுகளைத்திருத்து வதற்கான தொகை உரிய முறை யில் மதிப்பீடு செய்யப்படாமல் நிதி வழங்கப்பட்டதனால் சிறிய சேதங் களுககும் அதிகளவு நிதி வழங்கப் பட்டுள்ளது.

அதேவேளை, சுனாமி அனர்த் தத்தினால் 48ஆயிரத்து 74 வீடுகள் சேதமடைந்ததாக சுனாமி வீட்டுப் புனரமைப்புப் பிரிவு கூறியதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (ற-8)

# பொங்குதமிழ் பிரசாரம்

(ஊரெழு)

எதிர்வரும் 30ஆம் திகதி நடை பெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வு தொடர்பான பிரசார நடவடிக்கைகளில யாழ். உயர் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் மிகவும் தீவிரமாக ஈடு பட்டு வருகின்றனர். (த-25)

# பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

பொது சுகாதார பரிசோதகர்களுக் கான பயிற்சிநெறி நாளை காலை 10 மணிக்கு பண்ணை சுகாதார கிரா மத்தில் நிகழ்வின் பிரதம விருந் தினரும் வடக்கு கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருமான வைத்திய கலாநிதி எஸ். குமாரவேற் பிள்ளையால ஆரம்பித்து வைக்கப் படவுள்ளது. (அ)

# கல்விக் கண்காட்சி

தென்மராட்சி கல்வி வலயத்தின ரால் கடந்த 21,22ஆம் திகதிகளில் கலவிக்கண்காட்சிகள் நடாததப்பட்டன.

டிறிபேக் கல்லூரியில நடைபெற்ற ஆரம்ப பிரிவுக் கண்காட்சியை அதி பர் க.அருந்தவபாலன் மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர் வரதராஜ மூர்த்தி ஆகியோர் மங்கள விளக் கேற்றி ஆரம்பிதது வைத்தனர். ா.குகனேசன் நடாவெட்டிக கண் காடசியை ஆரம்பித்து வைத்தார்.

சங்கத்தானை இந்துக் கலலூரியில நடைபெற்ற இடைநிலைப்பிரிவு கல் விக்காண் காட்சியை அதன் அதிபர் இ.கைலாயபிள்ளை மற்றும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் க. உதயகுமார் ஆகியோர் ஏற்றி வைக்க வலயக் கலவிட்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் நடாவெட்டி கண்காட் சியை திறந்து வைத்தார். (து-29)

# வருடாந்த பெருவிழா

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீவல்லி புர நாதர் தேவஸ்தான வருடாந்த பெரு விழா அடுத்த மாதம் 3ஆம திகதி முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத் துடன ஆரம்பமாகி தொடாந்து 10 தினங் கள் திருவிழா நடைபெறவுள்ளது.

11ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடை பெறும். (த-36)

# சச்சின்

## மீள் பார்வை

### ஒரு புயலின் கதை



## அறிமுகம்

ஆங்கில எழுத்தாளர் ரிச்சர்ட் பாக்கின் புகழ் பெற்ற கதை ஒன்று. மனித கதாபாத்திரங்கள் எதுவும் இடம்பெறாத அந்தக் குறுநாவலின் பிரதான நாயகன் ஜொனாதன் லவிங்ஸ்டன் சீகல் என்னுமொரு கடல் பறவை.

சீகல் வகைப் பறவைகளுக்கு பறப்பதற்கேற்ற உடல்வாகும், இறக்கைகளும், பலமும் உண்டு. ஆனால் அவற்றுக்குப் பறப்பதை விட, இரை தேடுவதில் தான் முனைப்பு அதிகம். கடற்கரையிலிருந்து பறந்து சென்று ஏதேனும் ஒரு மீன் பிடிப்படகின் மேல் பாய்ந்து ஒரு மீனையோ ரொட்டித் துண்டையோ கொத்திக்கொண்டு திரும்புவதோடு சீகல்களின் பறக்கும் ஆர்வம் முடிவடைந்து விடுகிறது.

சம்பிரதாயமான இந்த விதிமுறைகளை மீறிச் சிந்தித்த ஒரு பறவை ஜொனாதன். உணவுக்காக மட்டும் பறக்காமல் பறப்பதை அதன் சுகத்துக்காகவே அனுபவிக்க நினைத்தது ஜொனாதன். எல்லா சீகல் பறவைகளும் ஒரு குறிப்பிட்ட வேகத்தில் பறக்கிறது என்றால் அதற்கு மேலும் தன்னால் வேகமாகப் பறக்க முடியுமா என்று சிந்தித்தது. எல்லோரையும் விட அதிக உயரத்துக்குப் போய் பறக்கமுடியுமா? தாழ்வாகப் பறக்கமுடியுமா? வழக்கம் போல் நேராகப் பறந்துகொண்டிருக்காமல் சற்றே வளைந்து திரும்பினால் என்ன ஆகும். இப்படி பறததல் தொடர்பான ஏராளமான கேள்விகளை தன்னையே கேட்டுக்கொண்டு புதுப்புது விஷயங்களை முயன்று பார்த்து தொடர்ச்சியான பயிற்சிகளால் அதற்கு முன் வாழ்ந்த சீகல் பறவைகள் எட்டிப் பார்க்காத உயரத்தையெல்லாம் அனுபவித்தது ஜொனாதன்!

அதன் பிறகும் ஜொனாதனுக்குத் திருப்தியில்லை. இப்போது இருப்பதைவிட இன்னும் அதக உயரம் போகமுடியுமா? தங்களின் தகுதிகளும் திறமைகளும் தெரியாமல் இன்னமும் கீழே வெறும் உணவுக்காக வாழ்ந்துகொண்டிருக்கிற தன் சக சீகல் பறவைகளுக்கெல்லாம் சுதந்திரமாகப் பறத்தலின் சந்தோஷத்தைச் சொல்லித் தரமுடியுமா என்று யோசித்த ஜொனாதன் தன்னிடம் மாணவர்களாகச் சேர்ந்த சில இளைய பறவைகளுக்கு தனது தத்துவத்தை அழுத்தமாகச் சொன்னது. 'நம்மால் இது தான் முடியும் இது முடியாது என்று எந்த எல்லைகளும் வைத்துக்கொள்ளாமல் இருப்பது தான் உண்மையான சுதந்திரம். அந்த இலட்சிய நிலையை நோக்கிப் பயணித்துக்கொண்டே இருப்பதில்தான் வாழ்க்கையின் முழு அர்த்தமும் அடங்கியிருக்கிறது.

"சச்சின்" என செல்லமாக அழைக்கப்படும் சச்சின் ரமேஸ் டெண்டுல்கரைப் பார்க்கும் போதெல்லாம் ஜொனாதன் சீகல் பறவைதான் என் நினைவுக்கு வரும். தன் மனத்துக்குப் பிடித்த கிரிக்கெட் ஆட்டத்தை நேசிப்பதிலும் எல்லைகள் என்று எதையும் அமைத்துக்கொள்ளாமல் பிறர் உண்டாக்கி வைத்த வேலிகளைக் கூட உடைத்தெறிந்து விட்டு மேலே மேலே போய்க் கொண்டிருப்பதிலும் அவர் காலத்தை மீறிய மனிதர். ஜொனாதனிடம் கற்றுக்கொண்ட இதர சீகல் பறவைகள் போல் நாமும் சச்சினைப் பார்த்துத் தெரிந்து கொள்வதற்கு ஏராளம் இருக்கிறது.

இந்திய அணிக்காக சச்சின் விளையாடத் துவங்கியபோது தான் எங்கள் வீட்டுக்கு தொலைக்காட்சிப் பெட்டி வந்ததாக ஞாபகம். அப்போதெல்லாம் ஒரு நாள் போட்டிகள் மட்டும் தூர்தர்ஷனில நேரடி ஒளிபரப்பாகும் கிரிக் கெட் ஆட்டத்தின் சுவாரஸ்யத்தைவிட இந்தியா பேட்டிங்செய்கிறதா அல்லது பந்துவீசுகிறதா என்று கூட தெரியாமல் எல்லாப் பந்துகளுக்கும் 'ஃபோ ஓஓஓஓஓர்' என்று அடிவயிற்றிலிருந்து கத்துவது எங்களுக்குப் பிடித்த பொழுது போக்காக இருந்தது.

அப்போது எங்களோடு இருந்த எங்கள் அத்தை திருமதி ராஜேஸ்வரி அம்மாளுக்கு பார்வை இல்லை. ஆனாலும் எங்களுடைய திடீர் ஞானத்தால் (?) அவர்களுக்கும் கிரிக்கெட்டின் மீது அதீத ஆர்வம் பிறந்து, அவ்வப் போது எங்களிடம் ஆட்ட நிலவரங்களை விசாரித் துக்கொண்டிருந்தார். யாருடா அது பேட்டிங்?

யாருக்குத் தெரியும் அத்தை? ஆனா இப்பத்தான் மூனு ஃபோர் அடிச்சான் என்போம் திரையிலிருந்து கண்களை விலக்காமல்.

பதினாறரை வயது சச்சின் டெண்டுல்கர், பள்ளிக்கூடத்திலிருந்து நேரடியாக சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடப் புகுந்துவிட்ட செய்தி அப்போது இந்தியாவெங்கும் பரபரப்பாகப் பேசப்பட்டது. குழந்தை முகம் மாறாத சச்சினின் புகைப்படங்கள் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளியானதால் சச்சின் தனது முதல் போட்டியில் விளையாடுவதற்கு முன்பே 'சின்னப்பயல் இந்த வயதில் இந்தியாவுக்காக விளையாடுகிறானே' என்று இந்திய கிரிக்கெட் ரசிகர்கள் சச்சினின் மேல் அளவற்ற பாசத்தையும் தாய்மையுணர்வையும் வளர்த்துக்கொண்டார்கள். குமுதத்திலோ விகடனிலோ சச்சினின் படத்தைப் பார்த்துவிட்டு நாங்கள் ஆச்சரியத்தோடு வர்ணித்ததில் எங்கள் அத்தைக்கும் முகம் தெரியாத சச்சினைப் பிடித்துப் போய்விட்டது.

சச்சினைப்பார்த்து கிரிக்கெற்கற்றுக் கொண்ட தலைமுறை எங்களுடையது. செஞ்சுரி என்றால் அது சச்சின் அடிப்பது தான். வெற்றி என்றால் அது சச்சின் தேடிப் பிடித்துக் கொண்டு வருவது தான் என்று கிரிக்கெற்றுக்கு மேலாக சச்சினை நேசித்து வளர்ந்த, வளர்கிற சந்தோஷமும் பெருமையும் எனக்கு எப்போதும் உண்டு. சச்சின் ஒரு விளையாட்டு வீரர் என்ற நிலையைக் கடந்து மிக உயர்ந்த மனிதராகவும் அவரைப்பார்க்கிறேன். மதிக்கிறேன். அந்த பிரமிப்புத்தான் இந்த நூலை எழுதத்தூண்டியது.

சச்சினது வெற்றிக்குப் பின்னால் இருந்த கடின உழைப்பையும் போராட்டங்களையும் இந்த நூல் விபரித்துச் சொல்லும். கிரிக்கெற் விளையாடுகிறவர்களுக்கும் ரசிகர்களுக்கும் மட்டும் இல்லாது எந்தத் துறையானாலும் அதில் முன்னேற விரும்பும் எவருக்கும் சச்சினின் வாழ்க்கை ஒரு பாடமாக இருக்கும் என்பது நிச்சயம்.

கிட்டத்தட்ட 15 ஆண்டுகளாக தனது உன்னதமான கிரிக்கெற்றின் மூலம் நம் இதயங்களையெல்லாம் உற்சாகப் பெருமிதத்தில் நனைத்துக்கொண்டிருக்கும் சச்சினுக்கு இந்த நூல் ஓர் எளிய பதில் மரியாதை.

என்றும் அன்புடன்

*என். சொக்கன்* (தொடரும்)









நேற்றுக்காலை பொம்மை வெளியில் இனந்தெரியாதவாகளால் சுட்டுக்கொலை செய்யப்பட்ட ஜெயராசா லீலாவதியின் உடலை நீதிபதி திருமதி ஸ்ரீ நிதி நந்தசேகரம் பார்வையிடுவதையும், இறந்த பெண்ணின் பிள்ளைகளை விசாரணை செய்வதையும் சுடப்பட்ட வெற்றுத்தோட்டாக்களை பொலிஸார் சேகரித்துகையில் வைத்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-தி. திலீப், எஸ். தவராசா)

## தேர்தல் பணியில் கிராம சேவகர்கள்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் கடமைகளில் கிராம சேவகர்கள் பக்கச்சார் பின்றிச் செயற்பட வேண்டும் எனத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் பணிகளில் ஈடுபட்டிருப்போருடன் கிராம சேவகர்கள் இணைந்து கடமையாற்ற வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

வாக்குச் சாவடிகளை அடையாளம் காணுதல் வாக்களிப்பின் போது சந்தேகததிற்கிடமானவர்களைக் கண்டு பிடித்தல் மற்றும் தேர்தல் பணியாளர்களின் தேவைகளை அறிந்து கொள்ளல் என்பன கிராம சேவகர்களுக்கு உள்ள கடமைகள் என்றும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார். (து-7)



உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி சாவகச்சேரி பிரதேச சபையினரால் நடாத்தப்பட்ட நூலகக்கண்காட்சியை யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் த. இராசையா நாடாவெட்டி ஆரம்பித்து வைப்பதையும் அருகில் சபைச் செயலர் கு.பாலச்சந்திரன், நூலகர் இ. தர்மலிங்கம் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம்:-சாவகச்சேரி நிருபர்)

# பொங்குதமிழில் அணிதிரள அறைகூவல்!

## சர்வதேசத்திற்கு எடுத்தியம்ப சகல மக்களும் ஒன்றிணைக!

(யாழ்ப்பாணம்)

எமது எதிர்காலத்திற்காக முப்பது வருடகாலமாக முன்னெடுக்கப்படும் விடுதலைப் போராட்டம் சரியான முடிவை எட்ட வேண்டும் எவ்வளவு விரைவாக முழுமையான, நிரந்தர யுத்தநிறுத்தம் ஏற்படுகிறதோ, வடகிழக்கு தன்னாட்சி அதிகாரம் கிடைகிறதோ அன்றுதான் தமிழரின் வாழ்வின் உதயம் ஆரம்பமாகும். எனவே, தமிழரின் சுயநிர்ணயக் கோரிக்கைகளை வலியுறுத்தும் முகமாக யாழ்.பல்கலைக் கழகத்தில் நடாத்தப்படவுள்ள பொங்குதமிழ் நிகழ்வில் அனைவரும் அணிதிரண்டு பங்கு



பற்ற வேண்டுமென சுரேஸ் பிரேமச்சந்திரன் எம்.பி. அழைப்பு விடுத்துள்ளார்.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற பொங்குதமிழ் ஏற்பாட்டு நிகழ்வில் உரையாற்றுகையிலேயே சுரேஸ் பிரேமச்சந்திரன் எம்.பி. இவ்வாறு குறிப்பிட்டார். இதில் மாவை சேனாதிராஜா எம்.பி.உட்பட சுமார் 500பேர் வரை கலந்துகொண்டனர்.

இதில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், எதிர்வரும் 30ஆம் திகதி 'பொங்கு தமிழ்' மக்கள் எழுச்சி பேரணியில் அனைவரும் கலந்துகொள்ள வேண்டும்.

இதுவரை காலமும் ஒரு ஆயுதப்போராட்டம் நடந்துவந்தது. இன்னும் அந்த ஆயுதப் போராட்டம் தற்காலிக யுத்தநிறுத்தம் என்ற அடிப்படையில் இருக்கிறது. நாங்கள் ஒரு நிரந்தர யுத்தநிறுத்தத்தை நோக்கி செல்ல வேண்டும். ஒரு கௌரவமான தீர்வை நோக்கி போகவேண்டும் அப்படியானால் வேண்டுமாக இருந்தால், நாம் ஒரு கௌரவமான தீர்வை எட்டும்வரை மக்கள் தாங்களாவே முன்வந்து இந்த மக்கள் பேரணிகளை நடாத்தவேண்டும்.

இந்த 30வருட போராட்டத்தில் எங்களது இழப்புக்கள் மிக அதிகமானவை, அது உயிரிழப்பாக இருக்கலாம். சொத்துக்களாக இருக்கலாம். இந்த இழப்புக்கள் எல்லாம் நாம் நமது மண்ணில் கௌரவமாக வாழ வேண்டும். எமது உரிமைகளுடன் வாழவேண்டும் என்ற காரணத்திற்காகவே சந்திக்கப் பட்டவை அதே சமயம், ஒன்றுக்கு 10 தடவை இடம்பெயர்ந்து இன்று மீண்டும் மீளக்குடியேறிய நிலையில் இன்னுமொரு யுத்தத்தை யாரும் விரும்பமுடியாது.

இன்றுமொரு யுத்தத்தை யாரும் விரும்பவில்லை என்றால் அதே சமயம் எங்களுடைய கௌரவமான தீர்வையும் நாங்கள் விட்டுவிட முடியாது என கருதினால். அந்த தீர்வை நோக்கி நாங்கள் செல்வது எவ்வாறு என்று நாங்கள் யோசிக்கவேண்டும். அந்தத் தீர்வை நோக்கிச் செல்வதற்கு இப் போராட்டம் மக்கள் போராட்டமாக மாற வேண்டும். சிங்கள தேசத்திற்கு கடந்த மூன்றரை வருடங்களாக நாங்கள் பல சந்தர்ப்பங்களை கொடுத்திருக்கின்றோம். தமிழீழ விடுதலைப்புலிகள் ஒருதலைப் பட்சமாக முதலாவதாக ஒரு யுத்தநிறுத்தம் செய்தார்கள் அதனைத் தொடர்ந்து ரணில் விக்கிரமசிங்கவும், தேசியத் தலைவர் பிரபாகரனும் யுத்தநிறுத்தம் தொடர்பாக ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்கள். ஆனால் அந்த ஒப்பந்தத்தில் கூறிய விடயங்கள் இதுவரை நிறைவு செய்யப்படவில்லை.

இன்னும் எமது மண்ணில் மக்கள் அகதிகளாக பல்வேறுபட்ட முகாங்களில் இருக்கிறார்கள். இதே போன்று இராணுவம் சந்திகளிலும் வீதிகளிலும் நிற்கின்ற ஒரு நிலைமையையும் பார்க்கிறோம். அந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் குறைந்த பட்சம் 180நாட்களுக்குள் இவர்கள் இங்கிருந்து விலகியிருக்க வேண்டும். ஆனால் எதுவும் நடைபெறவில்லை. அவை நடைபெறாமல இருந்த பொழுதும்கூட அதனை ஏற்றுக் கொண்டு சகித்து கொண்டும், இந்தப் பேச்சுவார்த்தைகளில் நாங்கள் தொடர்ந்து பங்குபற்றி வந்திருக்கின்றோம்.

ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் பல வேறுபட்ட நாடுகளில் நடைபெற்றன. இந்த ஆறு சுற்று பேச்சுவார்த்தைகளின் இறுதியில் அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் ஒரு உடன்பாட்டுக்கு வந்தார்கள். இந்த ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பொழுது உண்மையாக தமிழீழ விடுதலைப் புலிகள் ஆரம்பத்தில் ஒரு இடைககால நிர்வாகத்தை உருவாக்க வேண்டு மென்று கேட்டார்கள். அதற்கு பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தங்களது பக்கத்தில் இருக்கக் கூடிய கஷ்டங்கள் பிரச்சினைகள் எல்லாவறறையும் கூறி, அந்த இடைக்கால நிர்வாகத்திற்கு முன்பாக வடகிழக்கில் பாதிக்கப்பட்ட இடங்களை புனர்நிர்மாணம் செய்யக்கூடிய வகையில் சிரான் என்ற கடடமைப்பு ஒன்றை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் சேர்ந்து உருவாக்க வேண்டுமென கேட்டதற்கு இணங்க, அவ்வாறான ஒரு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

ஆனால் அது நடமுறைக்கு வரவில்லை. அரசாங்கம் அது நடமுறைக்குவர அனுமதிக்கவில்லை. அதற்குப் பிற்பாடு தமிழீழ விடுதலைபுலிகள் தாங்களாக முதல் முறையாக ஒரு இடைக்கால நிர்வாகத்தை உருவாக்குவதற்கான ஒரு வரைபைக் கொடுத்தார்கள. அந்த வரைபை கொடுத்த பொழுது உடனடியாக சந்திரிகா அம்மையார் மூன்று அமைச்சுக்களை பறித்து அரசாங்கத்தைக் கவிழ்த்தார். புதிய தேர்தல் வைத்தார். புதிய அரசாங்கம் வந்தது. இன்றுவரை பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படவில்லை.

இன்று மீண்டும் ஒரு ஜனாதிபதித் தேர்தலுக்கான காலகட்டத்தில் நாம் இருக்கின்றோம். இத்தேர்தலில் பங்குபற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எவ்வளவு தூரம் இனவாத கொளகைகளை ஏற்றுக்கொண்டு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டிருககிறார் என்பது அனைவரும் அறிந்ததே. இப்படியான ஒருவர் ஜனாதிபதியாக வந்தால் என்ன நிகழும் என்பதை நாங்கள் ஒருமுறை கற்பனைபன்னிப் பார்க்கவேண்டும்.

இனவாத சிந்தனையில்லாத ஆட்கள் என்று கூறக்கூடிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அல்லது ரணில் விக்கிரமசிங்க போன்றோர்கூட கடந்த மூன்றரை வருடத்திற்குள் எதனை சாதித்தனர். ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்காலத்தில் விடுதலைப் புலிக்ள் அமைப்பை இரண்டாக உடைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தமிழீழ விடுதலைப்புலிகளை பலவீனப்படுத்துவதன் ஊடாக தமிழ் மக்களின் கோரிக்கைகளை பலவீனப்படுத்தலாம். அதன் மூலம் இந்த வட-கிழக்கு இணைப்பு போன்றவற்றை இல்லாமல் செய்ய வேண்டும் என்ற பாரிய திட்டம் நிச்சயமாக இவர்களின் மத்தியில் இருக்கிறது.

ஆகவே, இந்தச் சூழ்நிலையில் ஒரு யுத்தம் ஏற்படாத வகையில் கௌரவமான ஒரு தீர்வும் எமக்கு எட்டவேணடும் என்றால் இந்த சர்வதேச சமூகத்திற்கு இந்த விடயங்களை மிகத் தெளிவான முறையில் எடுத்துச்சொல்லவேண்டும். நாங்கள் எவ்வளவு தூரம் விட்டுக்கொடுப்புகளைச் செய்திருக்கின்றோம். எலலாவற்றையும் ஏற்றுக்கொண்டு பேச்சுவார்த்தைக்கு வந்திருக்கின்றோம் ஆணால் இன்று பேச்சுவார்த்தையில் எந்தக் கட்டத்தில் நாங்கள் இருக்கின்றோம்? மூன்றரை வருடத்திற்கு பிறகும் கூட மீண்டும் நாங்கள் முதலாவது சதுரத்திற்குள்தான் வந்திருக்கின்றோம். எதுவுமே நடக்கவில்லை என்ற ஒரு சூழ்நிலைக்குள் வந்திருக்கின்றோம். அப்படியான ஒரு நிலைமைக்கு நாங்கள் ஒரு பொழுதும் இடம்கொடுக்கக் கூடாது.

இந்த வகையில் சர்வதேச சமூகத்திற்கு பாரிய கடமைப்பாடு இருக்கின்றது. இந்த சர்வதேச சமூகம் எங்களுக்கு மீண்டும் அழுத்தி அழுத்தி "யுத்தம் வேண்டாம் யுத்தம் வேண்டாம் பேசுங்கள் பேசுங்கள்'' என்று கூறுகின்றது. நாங்களும் கூட கடந்த மூன்று வருடமாக அதைக்கேட்டுக் கேட்டு அரசாங்கம் எடுத்த எடுப்புக்கெல்லாம் ஆடி ஆடி இன்றும் பேசுவதற்கு தயாராக இருக்கின்றோம். இநநிலையில் அரசாங்கத்தை பேச்சுவார்த்தை நிலைக்குக் கொண்டுவர சர்வதேச சமூகத்தால்தான் முடியும்.

இந்த நாட்டில் 2500 ஆண்டுகளுக்குக் மேற்பட்ட வரலாறு கொண்டவர்கள் நாங்கள். கால்ம் காலமாக நாங்கள் வடக்குக் கிழக்கு என்ற இந்தப் பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்றோம். அதனை பல்வேறுபட்ட அறிஞர்களும் ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள். இறுதியாக வந்த இந்திய இலங்கை ஒப்பந்தம் கூட வடகிழக்கு என்பது தமிழ் மக்களின் வரலாற்று பூர்வமான வாழ்விடம் என்பதை ஏற்றுக்கொண்டிருக்கிறது.

அதுமாத்திரமல்ல 1977,1981இல்,1983இல் அடித்து உதைத்து வெட்டி எம்மை எல்லாம் கொலைசெய்து குவித்தபொழுது எங்கு எம்மை கப்பலில் அனுப்பினர்? யாழ்ப்பாணம, மட்டக்களப்பு, திருகோணமலைக்குத்தான் அனுப்பினர் ஏன்? அங்கு அவர்களது வீடு இருக்கின்றது. அது அவர்களுக்குப் பாதுகாப்பான பிரதேசம் ஆகவே அவர்கள் அங்கு போகட்டும் என நினைத்தார்கள். எமது வீடு, எமது வாழ்விடம், எமது பிரதேசம் என்பதுதான எமது தாயகம் அந்தத் தாயகத்தில் தான் நாம் எம்மை நாமே ஆழககூடிய ஒரு சுயாட்சி ஒரு சமஷ்டி அரசியல் அமைப்புடன் கூடிய சுயாட்சி இதனை கொடுப்பதற்கு இலங்கையரசு தயாராக இல்லையென்றால் சர்வதேச சமூகம் என்ன செய்யப்போகினறது? எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக நாங்கள் பல்வேறுபட்ட நாடுகளின் தூதுவர்களை அழைத்திருக்கினறோம். சிங்கள அரசியல் கட்சிகளின் தலைவர்களை அழைத்திருக்கின்றோம்.

சர்வதேச பத்திரிகையாளர்களை அழைத்திருக்கின்றோம். எமது மக்கள் சொல்வதை தயவுசெய்து கேளுங்கள் எமது பிரகடனம் என்ன என்பதை தயவுசெய்து கேளுங்கள் நாம் வெறுமனே யுத்தவெறி பிடித்தவர்களாக இல்லை. பேசுவதற்கு தயாராக இருக்கின்றோம். பேசியிருக்கின்றோம். நாம் குறைந்த பட்சம் கௌரவமாக வாழ்வதற்கான சூழலை எதிர்பார்க்கின்றோம். அங்கு அந்தப் பிரகடனத்தை யார்சொல்கின்றார்கள். என்பதை கேட்டுச் சொல்லுங்கள் என நாங்கள் அவர்களுக்கு அழைப்பு விடுத்திருக்கின்றோம். அவர்கள் வருவார்கள் எனவும் எதிர்பார்க்கின்றோம். பொங்குதமிழ் நிகழ்வில் கலந்து கொள்ள அவர்கள் வருகின்ற பொழுது நாம் கடல் அலையாக திரண்டிருக்க வேண்டும். யாழ்." பல்கலைக்கழக மண்ணில் நாம் செய்யப் போகின்ற பிரகடனம் உலகம் முழுக்க எதிரொலிக்க வேண்டும் அந்த நியாயமான கோரிக்கைகள் சர்வதேச தலைவர்களின் காதுகளுக்கு எட்டவேண்டும்.

அந்த வகையில் உங்கள் ஒவ்வொருவரின் பங்களிப்பும் அவசியமாகும். இதற்காக அழைப்பு விடுப்பது தமிழீழ விடுதலைப்புலிகளுக்காகவோ சுரேஷ் பிரேமச்சந்திரனுக்காகவோ மாவை சோனாதிராஜாவுக்காகவோ அலலது வேறு யாருக்காகவோ அல்ல எங்களுக்காக உங்களுக்காக எங்கள் மக்களின் எதிர்காலத்திற்காக நாங்கள் எடுத்த இந்த 30வருடப் போராட்டம் என்பது சரியான ஒரு முடிவை எட்டவேண்டும். சரியான திசையை நோக்கிச் செல்லவேண்டும் எவ்வளவு விரைவாக நாங்கள் இந்த முழுமையான ஒரு நிரந்தரமான யுத்தநிறுத்தத்துக்கு வருகின்றோமோ எவ்வளவு விரைவாக ஒரு தீர்வினை எட்டுகின்றோமோ எவ்வளவு விரைவாக நாங்கள் அதி காரத்தைக் கைப்பற்றுகின்றோமோ வடக்கு-கிழக்கு அதிகாரத்தை நமது கைகளில் எடுக்கின்றோமோ அன்று தான் எமது வாழ்வில் உதயம் ஆரம்பமாகும்.

நாம் அந்த அதிகாரத்தைக் கைகளில் எடுக்கும் பொழுது திருகோணமலையில் புத்தர் சிலைகள் வராது, வடக்கு-கிழக்கு பிரியாது, எந்த சிங்களவருமே எமக்கு வால் ஆட்ட முடியாது. எமது மண்ணில் எமது கொளகைகளுக்கு இணங்க எமது அரசாங்கத்தின் ஊடாக எல்லாவற்றையும் நிறை வேற்றக்கூடியதாக இருக்கும்.

ஆகவே மிக விரைவாக தீர்வு ஒன்றை நோக்கி போகவேண்டும் அந்த தீர்வு தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய கௌரவமான தீர்வாக இருக்கவேண்டும். அந்தத் தீர்வை நோக்கி மிக விரைவாக நாம் செல்லவேண்டும். அந்த அதிகாரத்தின் ஊடாக நிச்சயமாக எமது வடகிழக்கு பிரதேசத்தை நாம் விரும்பிய வகையில் முன்னேற்ற எம்மால் முடியும்.

எனவே 30ஆம் திகதி நடைபெறும் எழுச்சிப் பேரணியில் பொங்குதமிழில் கலந்து கொள்வதற்குரிய முழு ஏற்பாடுகளையும் நீங்கள் கவனிக்க வேண்டும். பல்வேறுபட்ட திணைக்களங்கள் பாடசாலைகள், ஏனைய நிறுவனங்கள் மற்றும் வேலை செய்யக்கூடிய சகலருமோடு. பேசி, அனைவரும் ஒற்றுமையாக் ஒன்று திரண்டு இந்தப் பேரணியில் கலந்துகொள்ள வேண்டும். பல்கலைக்கழக சமூகத்தினர் வீடு வீடாகப் போகினறார்கள். பிரசாரம செய்கின்றார்கள். அவர்களுக்கு நீங்கள் உறுதுணை யாகவும் ஊன்று சக்தியாகவும் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

இந்தப் பொங்கு தமிழ் எழுச்சி என்பது சர்வதேச சமூகத்திற்கு எமது திடமான கோரிக்கைகளை பிரகடனம் செய்வது மாத்திரமல்ல; ஒரு யுத்தமற்ற கௌரவத்துடன் கூடிய தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு தீர்வை பேச்சுவார்த்தை மூலம் செய்வதற்கு நாங்கள் எல்லோரும் ஓர் அணியில் திரண்டு கடமையை நிறைவேற்ற வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். (ற)

# காலத்தின் தேவை; வரலாற்றுக் கடமை

**-சிவநேசன் எம்.பி.**

இழந்த உரிமைகளை மீளப் பெற்றுக் கொள்ள பொங்குதமிழ் நிகழ்வில் ஒன்று கூடி குரல் கொடுக்க வருமாறு கி.சிவநேசன் எம்.பி.அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

'தமிழ் இனம் தம்மைத் தாமே தாயக பூமியில் ஆண்ட இனம் சங்கிலி மன்னன் பண்டார வன்னியன் ஆட்சிக்காலத்துடன் தமிழ் மன்னர் ஆட்சி அந்நிய நாட்டுப் படைகளால் பறிக்கப்பட்டுவிட்டது. முதல் எமது ஆட்சி உரிமைகள் அற்றுவிட்டது. கல் தோன்றி மண்தோன்றாக் காலத்து முன்தோன்றிய மூத்த குடியினர் எனப் பெருமை பேசும் நாம் எமது இழந்த உரிமைகளை மீளப்பெறாத இழி நிலையில் இன்றும் வாழும் அவலம் தொடர்கிறது.

அந்நியர் ஆட்சிக்காலம் முடிவுறும் வேளை இலங்கை சுதந்திரம் அடைந்து விடடது எனும் செய்தியுடன் இலங்கையின் ஆட்சி அதிகாரம் சிங்கள இனத்திடம் ஒப் படைக்கபபட்டது. தமிழ் பேசும் இனம் சுதந்திரத்தை அனுபவிக்க முடியாத துன்பியல் வரலாறு அன்றுமுதல் இன்றுவரை தொடர்கின்றது.

மாறி மாறி ஆட்சிப்பீடத்தை அலங்கரிக்கும் சிங்களத் தலைமைகள் இனவாதக் கடும் போக்கினால் தமிழ்பேசும் இனத்தின் உரிமைகள் சுதநதிரம் பறிக்கப்பட்டு தம்மை ஆழ்பவராகவும் எம்மை ஆழப்படுபவர்களாகவும் மாற்றி இலங்கையை ஒரு பௌத்த சிங்கள நாடாக உருவாக்கும் திட்டத்தில் தமது நடவடிக்கைகளை முன்னெடுத்தமை தமிழ்பேசும் மக்களுக்கு செய்யும் வரலாற்றுத் துரோக நிகழ்வுகளாகும்.

இந்நிலையைப் போக்க தமிழ்பேசும் தலைவர்கள் நிராயுதபாணிகளாக நின்று அரசியல் பலத்தோடு பல அகிம்சைப் போராட்டங்களை மேற்கொண்ட போதெல்லாம் தமிழர்களுக்கு கிடைத்தது. சிங்கள இராணுவத்தின் அடி உதைகளும், கொலைகள், கொள்ளைகள், கற்பளிப்புக்களுமே இவை அனைத்தின் மொத்தவடிவமாக அரச பயங்கரவாதத்தின் கொடூரத்தினால் தமிழ்பேசும் மக்களின் பூர்வீக வாழ்விடங்கள் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத் திட்டங்களாக மாற்றப்பட்டன.

இவ்வேளையில் தான் தமிழ் பேசும் இனம் தம்மீது திணிக்கப்பட்டுள்ள கொடூர சிங்கள ஆட்சியாளரின் அடக்கு முறையிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளவும், தமிழ் இன அழிப்பை நிறுத்த வேண்டிய தேவையின் நிமித்தம் ஆயுதம் ஏந்திய போராட்டத்துள் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளவும் நேர்ந்தது.

தமிழ்பேசும் மக்களின் சுதந்திர வாழ்வுக்கு சுதந்திர தமிழீழ தாயகத்தை அமைத்துக்கொள்வதே முடிந்த முடிவாயிற்று.

சுனாமிப் பாதிப்பிற்கான பொதுக்கட்டமைப்பைகூட பேரினவாதிகள் ஏற்காத நிலையில் இன்னமும் கொக்கரித்து இனவாதத்தைத் தூண்டுவது அவர்களின் அறிவீனமாகவே சர்வதேசம் பார்க்கிறது. இனியும் நாம் அவர்களிடம் கோருவதற்கு எதுவும் இல்லை எனும் முடிவுக்கு தமிழ்பேசும் இனம் வந்துவிட்டது.

நாம் ஓா இனம், எமக்கோர் மொழிஉண்டு எமக்கான தாயகநிலப்பரப்பு உண்டு. தனியான படைபலம் உண்டு அரசியல் பலம் உண்டு. நிாவாக கட்டமைப்பு உண்டு. தாயக நிலப்பரப்பில் 70சதவீதத்தில் தனியான அரச இயந்திரம் இயங்குகிறது. இத்தகைய தகைமைகளைக் கொண்ட தமிழ் பேசும் இனம் அந்நியரின் ஆதிக்கத்தால் இழந்த தாயகத்தையும் அதன் ஆட்சி உரிமையையும் கோருவதில் என்ன தவறுண்டு?

சர்வதேசமே இதனைப் புரிந்துகொண்டு அறியாமையில் சிக்குண்டு சிதறிக்கிடக்கும் சிங்கள அரசுக்கும் தலைமைகளுக்கும் அழுத்தம கொடுக்கவேண்டும். அதன் மூலம் எமது மக்கள் எதிர்பார்க்கும் நிரந்தரத் தீர்வினை பெற்றுத்தர வேண்டும். அல்லது எமது இனத்தின் சுயநிர்ணய உரிமையை சுதந்திரத்தை தன்னாட்சி அதிகாரத்தை பெற்றுக்கொண்டுவாழ நாம் போாரடுவதற்கு ஒத்துழைப்புத்தரவேண்டும்.

இந்நிலையை சர்வதேச சமூகத்திற்கு உணர்த்த வவுனியாவில் வடகிழக்கு தமிழ் பேசும் மக்கள் ஒன்றிணைந்து கடந்த ஜூலை மாதம் 27ஆம் திகதி தெரிவித்த ஆணையை வலியுறுத்தி எதிர்வரும் 30ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடாத்தும் பொங்குதமிழ்-2005 நிகழ்வில் அனைத்து தமிழபேசும் மக்களும் ஒன்றுகூடி எம் இனத்தின் உரிமைக்குரலை உலகறியச் செய்வதற்கு உணர்வுடனும் உறுதியுடனும் பங்குபற்ற வேண்டும். இது எமது காலத்தின் தேவை வரலாற்றுக்கடமை என உணர்ந்து சிந்தியுங்கள்; செயல்படுங்கள்; வெற்றி நமதே என உறுதி கொள்ளுங்கள்! எனக் குறிப்பிட்டுள்ளது. (ற)

## இன்று ஒரு தகவல்

# ஆகிரி ராகம்

ஒருநாள் நாரதர் ஒரு பாட்டு பாடிக்கொண்டே வந்தார். நாரதர் ஏதாவது சிக்கலை உருவாக்குவதில் வல்லவரே. அவர் ஏன் பாட்டுப் பாடிக் கொண்டு வந்தார் என்று கேட்கிறீர்களா? இந்த விஷயத்தில் அவரே ஒரு சிக்கலில் மாட்டிக்கொண்டார். அதன்பின் ஒரு வழியாகத் தப்பி வந்தார். அந்தக் கதையைக் கேளுங்கள்.

நாரதர் பாடிக் கொண்டு வந்தார் என்று சொன்னேன் அல்லவா? அவர் ஆகிரி ராகத்தில் அந்தப் பாடலைப் பாடிக் கொண்டு வந்தார். இந்த ராகத்தை நாம் சரியாகத்தான் பாடுகிறோமா? என்ற சந்தேகம் அவருக்கு. உடனே சரஸ்வதியிடம் போய் கேட்டார்." நான் பாடும் இந்த ராகம சரியாக இருக்கிறதா?" என்று.

அதற்கு சரஸ்வதி தேவி என்ன சொன்னார் தெரியுமா? "நீர் பாடுவது சரியா இல்லையா என்பதை ஆஞ்சநேயரிடம் போய் கேட்டுத் தெரிந்துகொள்" என்று சொன்னார். நாரதருக்கு என்னவோ மாதிரி ஆகிவிட்டது. நான் எங்கே... ஆஞ்சநேயர் எங்கே அவரிடம் போய் கேட்டுத் தெரிந்து வைத்திருக்கும் அளவுக்கு நிலமை ஆகிவிட்டதே என்று நினைத்தார். இருந்தாலும் சரஸ்வதி சொன்ன பின் சும்மா இருக்கமுடியுமா?

நேராகப் போனார் ஆஞ்சநேயரிடம். பாடிக் காட்டி "இது சரியா?" என்று கேட்டார். ஆஞ்சநேயர் நாரதரை அழைத்துக் கொண்டுபோய் ஒரு மலையில் நிறுத்தி "இப்போது பாடு. அது சரியாக இருந்தால் இந்த மலை உருக வேணடும்" என்றார். நாரதர் பாடினார் மலை உருகவில்லை." சரி இப்போது நான் பாடுகிறேன் பார்" என்று கூறி விட்டு ஆஞ்சநேயர் பாடினார். மலை உருக ஆரம்பித்தது.

"நான் நின்று கொண்டிருக்கும் மலை உருகுகிறதே எனறு சத்தம் போட்டார் நாரதர்.ஆஞ்சநேயர் பாதியில் பாட்டை நிறுததினார். உடனே உருகுவதும் நின்று விட்டது. உருகிய மலை உறைய ஆரம்பித்துவிட்டது. நாரதரின் கால் பாறையில் மாட்டிக்கொண்டது. எடுக்க முடியவில்லை. மீண்டும் சத்தம் போட்டார்.ஆஞ்சநேயர் மறுபடியும் பாடி நாரதரைக் காப்பாற்றினார்.நாரதர் தப்பித்தோம் பிழைத்தோம் என்று எட்டத்தில் வந்து நின்று கொண்டார். அவரது கோபம் குறையவில்லை. அதனால் ஒரு சாபம் கொடுத்துவிட்டார். எப்படித் தெரியுமா? இந்த ஆகிரி ராகத்தை யார் பாடினாலும் அவருக்குச் சோறு கிடைக்கக் கூடாது என்று. அதனால் இந்த ராகத்தை இப்போது பாடுவதற்கு பயப்படுபவர்கள் உண்டு.

ஒரு சங்கீத வித்வான் இதை சோதித்துப் பார்க்க வேண்டும் என்று புறப்பட்டார். தயிர் சாதத்தைக் கட்டி எடுத்துக் கொண்டு ஒரு மூங்கில் காட்டுக்குப் போனார். வளைந்திருந்த ஒரு மூங்கிலில் சோற்று மூட்டையைக் கட்டினார். கீழே உட்கார்ந்து ஆகிரி ராகம் பாடினார். பாடி முடித்து விட்டு கண்ணைத் திறந்து பார்த்தார். சோற்று மூட்டையைக காணவில்லை என்ன ஆயிற்று தெரியுமா? சூரியஒளி படப பட வளைந்திருந்த மூங்கில் நிமிர்ந்துவிட்டது. கட்டுச்சோறு கைக்கு எட்டாத தூரத்திற்குப் போய்விட்டது. சோறு கைக்கும எட்டவில்லை வாய்க்கும் எட்டவில்லை.

பசி வயிற்றைக் கிள்ளுகிறது என்ன செய்வதென்று யோசித்தார். ஒரு பெரிய செல்வந்த வீட்டிற்குப் போனார். "பசிக்கிறது" என்றார். உடனே இவரை உட்கார வைத்து இலை போட்டார்கள்.

சோறு போட்டார்கள்.பசியோடு அதைப் பார்த்ததும் இவருக்கு சந்தோஷம் தாங்கமுடியவில்லை. "ஆகிரியால் இனி எதுவும் முடியாது" என்று சொல்லிக் கொண்டே சோற்றைக் கையில் எடுத்தார். அதற்குள் இருவர் வந்து அவரை இழுத்துச் சென்று வெளியே தள்ளிவிட்டார்களாம். என்ன விஷயம் தெரியுமா? அந்த செல்வந்தரின் மனைவியின் பெயர் ஆகிரியாம். ஆகிரி ராகம் பாடினால் சோறு கிடைக்காது என்பதற்கு இப்படியெல்லாம் கதைகள் உண்டு.

அது உண்மை என்ற நினைப்பில் பாடுவதற்குப் பயப்படுபவர்களும் உண்டு. ஆகிரிராகத்தை வைகறைப் பொழுதில் சுத்தமாக வேறு ஸ்வரம் எதுவும் கலக்காமல் பாடினால் சோறு கிடைக்காது என்பது ஒரு நம்பிக்கை அவ்வளவுதான். இவ்வளவும் இருந்தும் எனக்குத் தெரிந்த ஒரு சங்கீத வித்வான் தினமும் ஆகிரி ராகம் பாடிக் கொண்டே இருப்பார். அதுவும் வீட்டிற்குள்ளேயே அதிகாலை நேரம் பாடுவார். அவரை ஒருநாள் சந்தித்து " உங்களுக்கு மிகவும் தைரியம்" என்றேன். "ஏன்அப்படிச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டார். "ஆகிரிராகத்தை அவ்வளவு துணிவாக உங்கள் வீட்டிலேயே பாடுகிறீர்களே" என்றேன். அவர் பரிதாபமாக என்னை நிமிர்ந்து பார்த்தார்."அப்படி இல்லை சார்! நான் எந்த ராகம் பாடினாலும் எங்கள் வீட்டில் சோறு கிடைக்காது சார்! அதனால் தான தைரியமாக அந்த ராகத்தைப் பாடுகிறேன்" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ஆனந்தசங்கரி வழக்கு விசாரணை நவம்பர் 28ற்கு ஒத்தி வைப்பு

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் பதவியில் இருந்து ஆனந்த சங்கரி நீக்கப்படுவதற்கு எதிராக நியமிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு மீதான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் நடைபெற்றது.

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் இது குறித்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது ஆஜரான மனுதாரர் ஆனந்த சங்கரி சாட்சியமளித்தார்.

2003ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் திகதி தமக்கு எதிராக பிரதிவாதிகளான கட்சியின் செயலர் ஆர். சம்பந்தன், சிரேஷ்ட உப தலைவர் ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோர் கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானம் கட்சியின் யாப்புக்கு முரணானது என தெரிவித்தார்.

ஆனையிறவு முகாம் மீதான தாக்குதல் சம்பந்தமாக தான் வெளியிட்ட கருத்துக்களை மையமாகக் கொண்டு இந்த நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டது என்றும் விடுதலைப் புலிகளுக்கு பயந்தே இதனை பிரதிவாதிகள் மேற்கொண்டதாகவும் ஆனந்தசங்கரி தனது விசாரணையில் தெரிவித்தார்.

இந்த நிலையில் வழக்கு விசாரணை நவம்பர் 28ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ச-8)

# கைதான கடற்புலி உறுப்பினரை ம.உ.ஆ.குழு அதிகாரிகள் பார்வை

(கொழும்பு)

பலாலி உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள புலிகளின் கடற்புலி உறுப்பினரை இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்ப்பாண கிளை அதிகாரிகள் நேற்று முன்தினம் சென்று பார்வையிட்டுள்ளனர்.

கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட இவர் காங்கேசன்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார். அவசர காலச் சட்டத்தின் கீழ் கடற்படையின்ரால் இவர் கைது செய்யப்பட்டதை அடுத்து பொலிஸாரின் வேண்டுகோளுக்கு இணங்கவே மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் இவரைச் சென்று பார்வையிட்டுள்ளனர்.

அதேவேளை, பருத்தித்துறை காங்கேசன்துறைப் பகுதிகளில் கைது செய்யப்பட்ட புலிகளின் இரண்டு உறுப்பினாகளை யாழ். நீதிமன்றினால் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ற-8)

# சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய இளைஞர் கைது

(பொலநறுவை)

சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடினார் என கருதப்படும் ஒருவரை தம்புள்ள சந்தியில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் பொலநறுவை மாவட்டம நாமல் பொக்கணவைச சேர்ந்த 22 வயதான மாதவ ராசா சுரேஷ் எனவும் இவர் கருணா அணியைச் சேர்ந்தவராக இருக்கலாம் எனவும் பொலிஸார் தொிவித்துள்ளனர்.

இவர் நீதிமன்ற உத்தரவின் பேரில் எதிர்வரும் 10ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவரின் சகோதரரான மாதவ ராசா பிரபு கடந்த மாதம் 15ஆம் திகதி இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டார். என்பது குறிபபிடத்தக்கது. (த-7)

# தேர்தல் தொடர்பான சந்திப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் ஜனாதிபதி தேர்தலினை நடாத்துவது தொடர்பாக மற்றுமொரு சந்திப்பினை தேர்தல் ஆணையாளர் நடாத்தவுள்ளார்.

இச் சந்திப்பு ஜனாதிபதித்தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் நடாத்தப்படவுள்ளது.

இச் சந்திப்புக்கு வடக்கு-கிழக்கின் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் பாதுகாப்பு தரப்பினர் அழைக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது பாதுகாப்பு நிலைமை மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மக்கள் வாக்குகளைச் செலுத்துவதற்கான ஏற்பாடுகள் குறித்து ஆராயப்படவுள்ளது. (த-4)

# ரணிலுக்கு ஆதரவாக இ.தொ.கா, மு.கா கட்சிகள்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிவேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவை ஆதரிக்கவுள்ளன.

இதுதொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்புகள் எதிர்வரும் வாரத்தில் வெளியிடப்படுமென கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

ரணில் விக்கிரமசிங்கவுடன் இதுதொடர்பான ஆலோசனைகளை இருகட்சியும் நிறைவுசெய்துள்ளன.

கடந்த 1999ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா குமாரதுங்கவை இவ்விரு கட்சிகளும் ஆதரித்தன என்பது குறிப்பிடத்தக்கது. (த-4)

# விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் பூர்த்தி

(கொழும்பு)

அண்மையில் நடாத்தப்பட்ட ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான விடைத்தாள் மதிப்பீட்டுப்பணிகள் பூர்த்தியடைந்துவிட்டதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அண்மையில் நடாத்தப்பட்ட புலமைப் பரிசில் பரீட்சையில் நாடளாவிய ரீதியில் சுமார் 3 இலட்சம் மாணவர்கள் தோற்றினார்கள்.

இப்பரீட்சையின் பெறுபேறுகள் அடுத்த மாதம் முதல் வாரத்தில் வெளியிடப்படும் என பரீட்சைத் திணைக்களம் தெரிவித்தது. (த-4)

# பொங்குதமிழ் நிகழ்விற்கான பாதை,வாகன ஒழுங்கு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் நடைபெற்ற தமிழ் தேசிய பிரகடனத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் எதிர்வரும் 30ஆம திகதி வெள்ளிக்கிழமை பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ள மாபெரும் பொங்கு தமிழ் நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான மக்கள் யாழ். மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் ஒன்று திரள நெரிசலையும் வாகன நெரிசலையும் குறைப்பதற்காக பின்வரும் ஒழுங்கமைப்பை பின்பற்றி நிகழ்வு சிறப்புற நடைபெற ஒத்துழைப்பு வழங்குமாறு ஏற்பாட்டுக்குழு கேட்டுள்ளது.

யாழ்.நகரப் பகுதி,தீவகப பகுதி மக்களுக்கான வாகனங்கள் பிறவுண் வீதி ஊடாக நரியன் குண்டுக்குளத்தடியிலும், வலி.மேற்கு மக்களின் வாகனங்கள் நாச்சிமார் கோவிலடியிலிருந்து கலட்டிச்சந்தி வரையும், தென்மராட்சி வாகனங்கள் திருநெலவேலிச் சிவன் அம்மன் கோவில் வீதி ஊடாக கோவில் முன்றலிலும், வடமராட்சி வாகனங்கள் திருநெல்வேலிசந்திக்கும் கல்வியங் காட்டுச் சந்திக்கும் இடைப்பட்ட ஆடியபாதம் வீதியிலும், கோணடாவில் தொடக்கம் புண்ணாலைக்கட்டுவன் வரையானை வாகனங்கள் திருநெல்வேலிச் சந்திக்கும்,கோண்டாவில் சந்திக்கும் இடைப்பட்ட பலாலி வீதியிலும், வலி. வடககு, வலி. தெற்கு மக்களுக்கான வாகனங்கள் நந்தாவல் அம்மன் கோவில் பகுதி, பொற்பதி வீதி, புகையிரத வீதியிலும் தரித்து நிற்கும்.

துவிசசக்கரவண்டி,மோட்டார் சைக்கிள் வண்டி பாவனையாளாகளுக்குரிய தரிப்பு நிலையங்கள யாழ். பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலய முன்றல், யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மைதானம், திருநெல்வேலி பனிக்கர் வளவு மைதானம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளது.

மேறபடி ஒழுங்கமைப்பை பின்பற்றி இலகுவானதும் வசதியானதும் ஆன போக்குவரத்தின் ஊடாக நிகழ்வு சிறப்புற நடைபெற அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறு பொங்குதமிழ ஏற்பாட்டுக்குழு கேட்டுள்ளது. (ச)

# முஸ்லிம் சமாதான செயலகத்திற்கு நோர்வே 23.9 மில்.ரூபா வழங்கியது

(கொழும்பு)

முஸ்லிம்களின் சமாதான செயலகத்திற்கு 23.9 மில்லியன் ரூபாவை நோர்வே அரசாங்கம் வழங்கியுள்ளது.

சமாதான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இச்செயலகத்தின் பணி முக்கியமானது என இலங்கைக்கான நோர்வேத் தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம்களின் சமாதான செயலகம், யுத்த நிறுத்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துதல் மற்றும் எதிர்காலத்தில் இடம்பெறும் சமாதான பேச்சுவார்த்தைகளின் போது முஸ்லிம் அரசாங்கக் கட்சிகளோடு தொடர்புகளை ஏற்படுத்தி முஸ்லிம் மக்களின் பிரசசினைகள் தொடர்பாக பொது இணக்கப்பாடுகளை ஏற்படுத்துதல் தொடர்பான அனுசாரணையாளர்களாக முஸ்லிம் சமாதான செயலகம் செயற்படும்.

சமாதான முயற்சிகளை கட்டியெழுப்புவதற்கு தேவையான ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் போன்றவற்றுக்குத்தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்கான மத்திய நிலையமாகவும் இந்த சமாதான செயலகம் செயற்படவுள்ளதாகவும் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-8)

# ஆசிரிய சங்கத்தின் அவசரகூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்ட செயற்குழுவின் அவசர கூட்டம் இன்று பிற்பகல் 4. மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் பொங்கு தமிழ் நிகழ்வு மற்றும் அடுத்த மாதம் 5ஆம் திகதி மேற்கொள்ளவுள்ள ஒரு நாள் சுகவீனப் போராட்டம்என்பன தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளது.

இக் கலந்துரையாடலில் அனைத்துக் கிளைகள், வல யஙகள், மாவட்ட உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு மாவட்டச் செயலாளர் க.குமாரசாமி அறிவித்துள்ளார். (ச)

## பரிசளிப்பு விழா

(இணுவில்)

மயிலணி சைவ மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை விவேகானந்த மண்டபத்தில் அதிபர் நா.சிவநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாம வலய பிரதிக் கல்விப்ப பணிப்பாளர் கு.சண்முகநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (த-122)

## அன்பளிப்பு

(சாவகச்சேரி)

யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு பல்வேறு வசதிகள் கொண்ட கட்டில், நாற்காலிகள் உட்பட சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள், மருந்துப் பொருட்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.(த-108)

## விண்ணப்பம் கோரல்

(துன்னாலை)

வடமராட்சி வலயத்தில் பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கைக் கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர் அல்லது இலங்கை அதிபா சேவை தரம் I உத்தியோகத்தர் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

மேலும் கரணவாய் வேதாரணியேஸ்வரா வித்தியாலயத்திற்கு அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அதிபர் தரம் உள்ளவர்கள் அல்லது ஆசிரியர் தரம் I இல் 2:1 உள்ளவர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம் என வடமராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஷி.அருளானந்தம் அறிவித்துள்ளார்.

இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 30ஆம் திகதியாகும். விண்ணப்பங்களை சுயமாகத் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ர-101)

## பயிற்சிக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களததினால் நடாத்தப்படும் இந்து தர்மாசிரியர் தேர்வுக்கான பயிற்சிக் கருத்தரங்கு எதிர்வரும் முதலாம், இரண்டாம் திகதிகளில் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிக் கருத்தரங்கில் விண்ணப்பித்த அனைத்து விண்ணப்பதாரர்களையும் கலந்துகொள்ளும் வண்ணம் கேட்கப்பட்டுள்ளது. (த)

## சமய அறிவுப் போட்டி

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு கோண்டாவில் கிழக்கு ஹிரி இளைஞர் மன்றத்தினரால் நடாத்தப்படும் சமய அறிவுப்போட்டி எதிர்வரும் 2ஆம் திகதி 9 மணி ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீநாராயண சனசமூகநிலையத்தில் நடைபெறவுள்ளது.

தரம் 1-3 வரை வகுப்பு ரீதியாக இடம்பெற உள்ள இப்போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் ஹரி மன்ற தலைவர் ச.கஜதீபனிடம் பதிவுகளை மேற்கொள்ளலாம். (த-36)

# சிறுவர் தினத்தையொட்டி நடாத்தப்பட்ட கட்டுரை, கவிதைப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு தென்மராட்சி வலயக் கல்வி பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட கட்டுரை, கவிதைப் போட்டி முடிவுகள் கல்விவலயத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

### கட்டுரைப் போட்டி

மேற்பிரிவு

1ஆம் இடம் - ந.சுபசனா - யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

2ஆம் இடம் - சி.அருண்யா - யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி.

3ஆம் இடம் - த.பிரிண்சியா - யா/ உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்.

மத்திய பிரிவு

1ஆம் இடம் - நா.கிருஷாந்தி - யா/ மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம்.

2ஆம் இடம் - கி.ரம்யா - யா/மட்டுவில் மகா வித்தியாலயம்.

3ஆம் இடம் - செ.தயாளினி யா/ எழுதுமட்டுவாள் அ.த.க. பாடசாலை.

கீழ்ப்பிரிவு

1ஆம் இடம் - அ.குகனிகா யா/ கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.

2ஆம் இடம் - ப.பிரதீபன் யா/ மட்டுவில் சந்திர மௌலிச வித்தியாலயம்.

3ஆம் இடம் - இ.பிரியதர்சினி யா/ கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம்.

### கவிதைப் போட்டி

மேற்பிரிவு

1ஆம் இடம் - ச.மஜிபா - யா/ உசன் இராமநாதன் வித்தியாலயம்.

2ஆம் இடம் - வி.சுகன்யா- யா/ மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்.

3ஆம் இடம் - அ.துஷ்யந்தினி யா/ கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தியாலயம்.

மத்தியபிரிவு

1ஆம் இடம் - மு.தயாபரன் - யா/ கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தியாலயம்.

2ஆம் இடம் -மு.றெமில்டன் - யா/ எழுது மட்டுவாள் அ.த.க.பாடசாலை.

3ஆம் இடம் - சி.விதுஜனா யா/மட்டுவில் கமலாசினி வித்தியாலயம். (த-47)

# நள்ளிரவில் ஓடு பிரித்து துணிகரத் திருட்டு

(மருதங்கேணி)

புலோலி தெற்கு ஆண்டியளா வைரவர் கோவிலுக்கு முன்பாகவுள்ள குருக்கள் வீட்டில் நள்ளிரவு நேரம் சமையலறையின் ஓட்டைப் பிரித்து இறங்கி இனம் தெரியாத திருடர்கள் அவவீட்டில் இருந்த சுவாமி அறையிலிருந்த பெட்டிகளில் வைக்கப்பட்டிருந்த 20 பவுண் பெறுமதி மிக்க தாலிக்கொடி, அட்டியல், காப்பு உட்பட பல நகைகளையும், 35 ஆயிரம் ரூபா ரொக்கப் பணத்தையும் திருடிச சென்றுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 12.30 மணியளவில் யோ.நாகேஸ்வர சர்மா என்பவரது வீட்டிலேயே இச்சம்பவம் நடைபெற்றது.

வீட்டில் இருந்தவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபொழுது இத்திருடர்கள் உட்சென்று இவர்கள் படுத்திருந்த கட்டிலில் கீழ் இருந்த திறப்பை இலாவகமாக எடுத்து பெட்டிகளைத் திறந்து தங்க நகைகளையும் ரொக்கப் பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ர-35)

# மீளக் குடியேற அனுமதி பெற்றுத் தருமாறு மகஜர்கள் கையளிப்பு

(கொழும்பு)

வவுனியா நொச்சிக்குள கிராம மக்கள் தமது சொந்த இடத்தில் மீளக்குடியமர அனுமதி பெற்றுத்தருமாறு கோரி மகஜர்களை கையளித்துள்ளனர்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வவுனியா மாவட்ட பிரதிநிதி, ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகள், வவுனியா மாவட்ட பிரதிநிதி, மாவட்ட அரசாங்க அதிபரின் பிரதிநிதி ஆகியோரிடம் நேற்று முன்தினம் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

தமது சொந்த இடத்திலிருந்து இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்து கடந்த 6 வருடங்களாக தரணிகுளம் முகாமில் வசித்து வரும் தாம் சொல்லொணா துன்ப துயரங்களின் மத்தியில் வாழ்ந்து வருவதாகவும் தாம் சொந்த இடத்தில் மீளக் குடியமர்ந்து வாழ வழிவகைகளை ஏற்படுத்தித் தரவேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

மேலும் தமது இந்தக் கோரிக்கைகளுக்கு ஒரு வார காலத்துக்குள் உரிய தீர்வு கிடைக்காவிட்டால் மகஜர்களை கையளித்த காரியாலயங்களுக்கு முன்னால தொடர் மறியல் போராட்டங்களை மேற் கொள்ளப்போவதாகவும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 150 குடும்பங்கள் 1999ஆம் ஆண்டு இடம்பெயர்ந்தனர். தற்போது குறிப்பிட்ட கிராமம் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ளதினரல் படையினர் மீள்குடியேற்றத்துக்குத் தடைவிதித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ர-8)

## பாம்பு தீண்டியதில் குடும்பப் பெண் பலி

(மருதங்கேணி)

அதிகாலை வேளை பனம்பழம் எடுக்கச் சென்ற குடும்பப் பெண் பாம்பு தீண்டி உயிரிழந்தார்.

அல்வாய் வடக்கைச் சேர்ந்த திருமதி கனகரத்தினம் சரோஜாதேவி (வயது 46) என்ற குடும்பப் பெண்ணே மரணமானவராவார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணியளவில் அதே இடத்திலுள்ள பனைக் காணிக்குள் பனம்பழம் எடுக்கச் சென்ற வேளை பாம்பு தீண்டியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

விஷம் தலைக்கு ஏறியதாலேயே மரணம் சம்பவித்ததாக மருத்துவப் பரிசோதனையை மேற்கொண்ட வைத்திய அதிகாரி சி.கதிரவேற்பிள்ளை தனது மருத்துவ அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ச-35)

## வலுக்குறைந்த மின்சாரம்

(ஊரெழு)

இலங்கை மின்சார சபையினால் ஊரெழு மேற்கு இன்றானை பகுதிக்கு வழங்கப்படும் மின்சாரம் இரவு 6.00 மணி தொடக்கம் 11 மணி வரையும் 'மிகக் குறைந்த' அளவில் வருவதால் மாணவர்கள் கல்வி கற்பது கடினமாகவுள்ளது.

இலங்கை மின்சாரசபை - சுன்னாகம கிளையிடம் அப்பகுதி மக்கள் இதுகுறித்து பல தடவை முறையிட்டபோதும் இதற்கு எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளபபடவில்லை என விசனம் தெரிவிக்கின்றனர். (த-25)

## கலை இலக்கிய விழா

(பொன்னாலை)

2005ஆம் ஆண்டிற்கான கலை இலக்கிய விழா வலி.தென்மேற்குப பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் விரைவில் நடாத்தப்படவுள்ளது.

இவ்விழாவில மூத்த கலைஞர்கள் பலரும கௌரவிக்கப்படவுள்ளனர். இதற்கான நிதி பொதுமக்களிடம் திரட்டப்படவுளளது. (த-49)

## பதிவுகளை மேற்கொள்க!

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில், 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2004ஆம் ஆண்டு வரை கற்கைநெறிகளை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான தொழில் வாய்ப்பினை ஆராயும் முகமாக தவல்கள் திரட்டப்படுகின்றன.

எனவே சம்பந்தப்பட்ட மாணவர்கள் சுய விபரக் கோவையுடன் எதிர்வரும ஒக்டோபர் 3ஆம் திகதி முதல் 7ஆம் திகதி வரை காலை 9.00 மணி தொடக்கம் 12.30 மணிவரை யாழ்.தொழில்நுடபக் கல்லூரி தொழில் வழிகாட்டல் ஆலோசனை நிலையத்தில் தங்கள் பதிவினை மேற்கொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார். (ர)

# விபச்சார விடுதிச் சுற்றிவளைப்பில் 21 யுவதிகள் கைது

(கொழும்பு)

கொழும்பு பாலத்துறைப் பொலிஸ் பிரிவினர் கடந்த திங்கட்கிழமை மூன்று விடுதிகளில் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின்போது 21 யுவதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வபச்சார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இந்த 21 யுவதிகளும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிகிறது. இவர்களில் மூன்று பேர் தமிழ் யுவதி களாவார்கள்.

மாளிகவத்தை தொழில்நுட்பக் கல்லூரிச் சந்தி, மருதானை பகுதிகளில் அமைந்துள்ள விடுதிகளில் நடாத்தப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே இந்த 21 யுவதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட யுவதி கள் அநுராதபுரம், பொலநறுவை போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்களென பொலிஸார் தெரிவித்தனர். (து-8)

# வாசிப்புப் பழக்கம் அருகிவருவது மிகவும் கவலையான விடயம்

பொழுதுபோக்கு அம்சங்கள் கூடக் கூட மக்களது வாசிப்புப் பழக்கம் குறைவடைந்து செல்கிறது. இது ஆரோக்கிய மானதல்ல என்று யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா தெரிவித்தார்.

அண்மையில் சாவகச்சேரி பிரதேச சபையினரால் அனுஷ்டிக்கப்பட்ட உள்ளூராட்சி வாரத்தின் ஓர் அங்கமாக நடைபெற்ற நூலகக் கண்காட்சியை நாடா வெட்டி ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கணடவாறு தெரிவித்தார்.

கொடிகாமம் பொது மண்டபத்தில் சபைச் செயலாளர் கு.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏராளமான செலவில் நூலகங்களை உளளூராட்சி சபைகள் நடத்துகின்றன. அதற்கேற்ப பொதுமக்கள், மாணவர்கள் தமது நூலகப் பாவனையை அதிகரித்து இதற்கு மேலும் ஊக்கமளித்தல் வேண்டும்.

தம் அறிவுப் பசியை நூலகப் பயன்பாட்டின் மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

தொடர்ந்து தலைமையுரை நிகழ்த்திய சபை செயலர் கு.பாலச்சந்திரன் கூறுகையில்,

தாய் சேய் நலத்திட்டத்தின் மூலம் கருவில் இருக்கும்போதே தம் சேவையை ஆரம்பிக்கும் உள்ளூராட்சிச் சபைகள் தமது சேவையை அம் மனிதனின் ஒவ்வொரு வளர்ச்சிப் படிகளிலும் வழங்கி வருகிறது.

இதற்கு மக்கள் தமது பூரண ஒத்துழைப்பைச் சபைக்குக் கொடுக்க வேண்டும். சபை நடவடிக்கைகள் பற்றி பூரணமாக அறிந்திருத்தல் வேண்டும் என்றார்.

இக் கண்காட்சியை ஏராளமான பொதுமக்களும், மாணவர்களும் பார்த்து பயன்பெற்றனர். (த-29)

## பொங்கு தமிழ் பிரசாரம்

(இணுவில்)

ஏழாலை, கட்டுவன் மற்றும் மல்லாகம் போன்ற பகுதிகளில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள், ஏழாலை மத்திய சனசமூக நிலையத்தினரால் பொங்கு தமிழ் பிரசாரங்கள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (த-122)

# நேர்முகப் பரீட்சை

(துன்னாலை)

வடமராட்சி வலயத்தில் 2000ஆம் ஆண்டுக்கும் 2004ஆம் ஆண்டுக்கும் இடப்பட்ட காலத்தில் தொடர்ச்சியாக 3 வருடங்கள் தொண்டர் ஆசிரியர் சேவை புரிந்த 177 பேருக்கு உடனடியாக நேர்முகப் பரீட்சையை நடாத்தி ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி முதல் நிரந்திர ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளது.

2004ஆம் ஆண்டுக்கு முன்னர் தொடர்சசியாக 3 வருடங்கள் சேவையாற்றிய அடிபபடைத் தகுதியுடையோருக்கே இந்நியமனம் வழங்கப்படவுள்ளது.

நேர்முகத் தேர்வினை பிரதிக்கல்விப் பணிப்பாளர், மேலதிக மாகாணக் கல்விப பணிப்பாளர் அரச அதிபரின் பிரதிநிதி ஆகியோர்கள் முன்னிலையில் நடாத்தப்படவுள்ளது.

தொண்டர் ஆசிரியர் பணிபுரிந்த பாடசாலையின் அதிபரும் பிரசன்னமாக வேண்டுமென்வும் மாகாண ஆளுநர் அறிவித் துள்ளதாக வலயக் கல்வி அதிகாரியொருவர் தெரிவித்தார். (ர-101)

## வீதி சேதம்

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின ஆளுகைக்குட்பட்ட நெற்கொழுவீதி கல் அகழ்வோரால் நாளாந்தம் சேதமாக்கப்படடு வருகின்றது.

கல் அகழ்தலை தடுத்து வீதியைப் புனரமைத்துத் தருமாறு இப்பிரதேச பொது அமைப்புக்கள் நகராட்சி மன்றத்திடம் கோரிக்கை விடுத்திருந்தும் இதுவரை நகராட்சி மன்றம் எந்தவொரு நடவடிக்கையும எடுக்கவில்லை என இப்பகுதி மக்கள விசனம் தெரிவிக்கின்றனர். (த-32)

## தொண்டர் ஆசிரியர்களுக்கு நேர்முகப்பரீட்சை

(கச்சாய்)

தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பிரதேசங்களில் உள்ள 30 தொண்டர் ஆசிரியர்களுக்கான நேர்முகத் தேர்வு நடைபெறவுள்ளது. இவர்களின் பெயர் விபரங்கள் வலய அலுவலகத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

நேர்முக தேர்வுக்கான திகதி விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என வலய அலுவலக அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

# பொங்குதமிழில் அணிதிரள அறைகூவல்!

## சந்தர்ப்பத்தை தவறவிடக்கூடாது

பத்மினி சிதம்பரநாதன் எம்.பி

சண்டையின்றி தமிழர் உரிமையோடு கூடிய சமாதானத்தை இலங்கைத்தீவில் ஏற்படுத்துவதற்கான ஒரு சந்தர்பபம தமிழ்மக்களின் கைகளில் வந்துள்ளது. அதை நாம் தவறவிட்டுவிடக்கூடாது. எனவே அனைவரும் பொங்குதமிழ் நிகழ்வில் அலை அலையாகத் திரண்டு வந்து கலந்துகொள்ள வேண்டும் என பத்மினி சிதம்பரநாதன் எம்.பி கேட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் 30ஆம திகதி நடைபெறவிருக்கும் பொங்கு தமிழில் மக்கள் கலந்துகொள்வதற்காகத் தயாராகி வருவதன் அதிர்வால் யாழ்.குடாநாடு குலுங்கிக்கொண்டிருக்கிறது. கடமை என்ற உணர்வுறுதியோடு மக்கள் இதற்காக அணிதிரண்டு வருகின்றனர்.

பொங்குதமிழ் வண்டி வீதிகள் தோறும் செல்லும்போது சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை மகிழ்ச்சி ஆரவாரத்தில் திளைக்கின்றனர். சிலர் வண்டியோடு சில தூரம் வந்து வண்டியை வழியனுபபி வைககின்றனர். வயது முதிர்ந்தவர்கள் கூட வண்டியில் ஏறி சிறிதுதூரம் வந்து தமது உற்சாகத்தைக் காட்டுகின்றனர். வண்டியை வழியனுப்பி வைக்கின்றனர். ஊரில் உள்ள மக்களையும் கூட்டிக்கொண்டு கட்டாயம் வருவோம் என்று உறுதிமொழிகள் தருகின்றனர்.

மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் திரள்வார்கள் என நாம் போகும் இடங்களில் எல்லாம் இனிபபான செய்தி எம் காதுகளிற்குக் கிடைக்கின்றன. பேருவகை கொள்ள முடிகின்றது. ஒடுக்கப்பட்டு கட்டுகளால் தளையுண்டு கிடந்த மக்கள தம் கட்டுகளை அறுத்துபடி பலம பெற்ற ஒரு பெரும் சக்தியாய் எழுந்து திரள்கின்றனர். தேசம தெரிகின்ற பூரிப்பு எங்கும பொங்கி வழிகின்றது.

எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக திரள்வோமோ அவ்வளவுக்கவ்வளவு விரைவாக விடுதலை. இத்திரள்வு ஒவ்வொரு வீடுகளில இருந்தும் ஆரம்பிக்க வேண்டும. இப் பொங்கு தமிழ் எழுச்சிக்காக மனங்களில் எழுச்சி கொள்வோம. எங்கள் ஊர்களை அலங்கரிப்போம். பதாகைகள் கொடிகளால் அலங்கரிப்போம். இதை ஒரு புனிதமான நாளாகக் கருதுவோம். நாங்கள் பயணிக்கும் துவிச்சககர வண்டிகளில் இருந்து பேருந்து வரை கொடிகளைப் பறக்க விடுவோம்.

தமிழ் மக்கள் தங்கள் அபிலாஷைகளைத் தெரிவிக்கும் நாள்தான் பொங்கு தமிழ். அபிலாஷை என்பது ஒவ்வொருவரின் தனிபபட்ட ஆசைகளை விட வித்தியாசமானது. தமிழ்த்தேசியம் தொடர்பான மக்களின் ஒருமித்த ஆசை. இராணுவ அடக்குமுறை காரணமாக இதனை வெளிப்படுத்தத் தனிமனிதராய், பயந்து போயிருந்த மக்கள் ஒன்று திரண்டு பரந்த வெளியில நின்று ஒருமித்த பலத்தால் பயம் தெளிந்து உலகுக்குச் சொல்லும் நாள்.

இதற்கு முதல் நாம் பயத்தினால் மௌனமாக இருக்க எங்களைப் பற்றி எங்கள் விருப்பம் பற்றி உண்மைக்குப் புறம்பான கதைகளே சிங்கள பேரினவாதிகளால்



வெளி உலகுக்குக் கூறப்பட்டது.

*நாங்கள் பெரும் திரளாகக் கலந்துகொண்டு எழுச்சியாக நடத்திய பொங்கு தமிழ் நிகழவுகள் தான் தமிழ் மக்களின் உண்மையான விருப்பதை, சுயநிர்ணய உரிமையோடு வாழ விரும்பும் அபிலாசையை உலகறியச் செய்தது.

*விடுதலைப் புலிகளின் வீரம் செறிந்த வெற்றிகள் காரணமாகவும, பொங்கு தமிழ எழுச்சி காரணமாகவும்தான் அரசு புலிகளுடன் யுத்த நிறுத்த ஒப்பந்ததை மேற்கொண்டது. பொங்கு தமிழுக்கு அந்தச் சக்தி இருந்தது. இதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் மக்கள் திரண்டால் வெற்றி நிச்சயம்.

இம்முறை பொங்குதமிழில்,

*நாங்கள் ஒரு தனித்தேசிய இனம்.

*எங்கள் மரபுவழித் தாயகத்தில் சுயநிர்ணய உரிமையுடன் வாழ விரும்புகின்றோம்.

*விடுதலைப்புலிகள்தான் எங்கள் ஏகப் பிரதிநிதிகள்.

என்ற அபிலாஷைகளை உலகுக்குத் தெரிவிப்பதோடு, இம்முறை எமது சுயநிர்ணய போராட்டததை அங்கீகரிக்கும்படி சர்வதேசத்தை கேட்டுள்ளோம். எமது தாயக நிலததையும், கடலையும் ஆக்கிரமித்து நிற்கும இராணுவம் எமது மண்ணை, எமது கடலை விட்டு உடனடியாக வெளியேறவேண்டும என்று கேட்கின்றோம்.

மூன்றரை வருடங்களிற்கு மேல் அரசுடன பேச்சுவார்த்தை நடத்தி அலுத்து இறுதியில் சுனாமி மனிதாபிமான பொதுக்கட்டமைப்பிற்குக் கூட நீதிமன்றத்தால் இடைக்காலத் தடை விதிக்கப்பட்ட நிலையில் அரசாங்கத்தில் முற்றிலும் நம்பிக்கை இழந்த நிலையில் சர்வதேசத்திடம் இக் கோரிக்கையை முன்வைக்கின்றோம்.

நாம் ஓர் யுத்த விளிம்பில் நிற்கின்றோம். பேரினவாதிகளால் நிழல் யுத்தம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. எந்த நிலையிலும யுத்தம் வெடிக்கும் என்ற நிலையில் பொங்கு தமிழ் 2005 வருகின்றது.

இந்த பொங்குதமிழ் சண்டையின்றி தமிழாகளின் உரிமையோடு கூடிய சமாதானத்தை அடைவதற்கான இறுதி சந்தர்ப்பம் இதற்கு சர்வதேசம் மதிப்பளிக்கத் தவறும் பட்சத்தில் தவிர்க்கமுடியாத படி ஒரு யுத்தத்தை எதிர்கொள்ள வேண்டியவர்களாய் நாம் நிர்ப்பந்திக்கப்படுவோம். எனவே எவ்வளவுக்கெவ்வளவு நாம் அணி திரண்டு எமது ஏகோபித்த குரலை சர்வதேசத்தின் காதுகளில் ஒலிக்கச் செய்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு எமது விடுதலை விரைவு படுததப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

## பூகோள வரைபடத்தில் புதுப்புள்ளி பிரசவத்திற்கு தயாராகின்றது

–கனடா ஈழத்தமிழர் தகவல் நிலையம்

"எங்கள் நிலம் எமக்கு வேண்டும். எங்கள் நிலமே எமக்கு வேண்டும்"

என்ற முழக்கத்துடன் 2001இல் ஆரம்பமான பொங்குதமிழ் இன்று "எங்கள் சுயநிர்ணய உரிமையை சர்வதேசமே அங்கீகா" என்ற கோரிக்கையுடன் எழுந்து நிற்பதைப் பார்க்கும்போது, ஈழத்தமிழர்களின் தாயக தேசிய தன்னாட்சிக் கோட்பாடுகளின் பரிணாம வளர்ச்சியை உணரமுடிகின்றது எனறு கனடா ஈழத்தமிழர் தகவல் நிலையம் வெளியிட்டுள்ள பொங்குதமிழ் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அணி திரண்டுள்ள தமிழ் மக்களின் மனக் கதவுகள் திறககப்பட்டு, அவர்கள்தம் அடிமனக் கிடக்கைகள் திரண்டு வெளிவருவதை பொங்குதமிழ் அற்புதமாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது. அரை நூற்றாண்டுக்கும் மேலாக சிங்களப் பேரினவாதத்தை நம்பி ஏமாந்தது போதும். இனியும நம்ப முடியாது என்னும் முடிவுக்கு தமிழர் நாம் வந்துவிட்டோம் என்பதை உலகுக்கு உணர்த்தும் மனிதச் சுவராகவும், மாபெரும் குரலாகவும் பொங்குதமிழ் பரிணாமம் பெற்றுள்ளதை இனியும் சர்வதேசம் உணராமல இருக்க முடியாது.

பூகோள வரைபடத்தில் ஒரு புதுப் புள்ளி அது. இந்து மகாசமுத்திரத்தின் கீழ் மடியில், பாரத தேசத்தின் தென்முனையில், தமிழ் நாட்டின் கோடிக்கரையில், இன்றோ நாளையோ மறுநாளோ என்று பிரசவத்துக்குத் தயாராகிக் கொண்டிருப்பதை, பொங்கு தமிழ் ஒலியெழுப்பி உலகுக்குக் காட்டி நற்கினறது. அகிலத்தில் பிறக்கப்போகும ஒரு புதிய நாட டின் வருகை அங்கே வெள்ளிக் கோடாகத் தெரிகின்றது.

அந்தப் பிரசவத்தின் தாதிகளாகவும தாரகைகளாகவும் உரமுடன் செயற்படும உங்களுடன், உரிமை கலந்த இரததபாசங்களாக நாம உணர்வுடன் தொடர்ந்து செயற்படுவோம் என எங்கள் தோள்களை உயர்த்தி நெஞ்சுகளை நிமிர்த்தி உறுதியுடன கூறுகின்றோம் என அந்நிலையம் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

## ஈழத்தமிழின வரலாற்றில் திருப்புமுனை

–மா.க.ஈழவேந்தன் எம்.பி

யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் 30ஆம் திகதி நடைபெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்ச்சி ஈழத்தமிழினத்தின் வரலாற்றில் ஒரு திருப்புமுனை. இதை மீளாய்வு செய்யவேணடிய தேவையில்லை என மா.க.ஈழவேந்தன் எம்.பி தெரிவித்துள்ளார்.

இது விடயம் தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

ஈழத்தமிழினத்தின் வரலாற்றை நாம் பின்னோக்கிப் பார்ப்போமாயின் ஈழத்தமிழன் ஏமாந்த வரலாற்றையும் ஏமாற்றப்பட்ட வரலாற்றையுமே நாம் காணலாம். இந்நிலை மேலும் தொடருமாயின் எம் இனம் இந்நாடடில் பூண்டோடு அழிக்கப்படுவது உறுதி. எம்மை வழிநடத்திய தலைவர்கள் தடம் புரண்டது உண்மை என்பதை ஏறகின்ற நாம அதே தவறினைத் தொடர்ந்து செய்வோமாயின் அவர்களுக்கும் எங்களுக்கும் எங்களுக்குமிடையே எதுவித வேறுபாடும் இல்லை. எமது முன்னைய தலைவர்கள் மீது பழிசுமத்துகின்ற நாம் அதே தவறினைச் செய்யின் எம் வழித்தோன்றல்கள எம்மீது வசைபாடுவது உறுதி. வரலாறும் எம்மீது பழிதூற்றுவதையும் நாம் தவிர்க்க முடியாது.

சந்திரிகா ரணிலினுடைய ஆட்சியைப் பலவீனப்படுத்துகின்ற முறையில் ரணில் அமைச்சரவையில் இருந்த பாதுகாப்பு அமைச்சு உட்பட பல முக்கியமான அமைச்சுக்களைத் தன் வசமாக்கினார். பலவீனமுற்ற ரணிலின் ஆட்சி கவிழ மீண்டும் 2004ஆம் ஆண்டு மீண்டும் தேர்தல் இடம்பெற்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சிப் பொறுப்பை ஏற்றது.

தமிழரைப் பொறுத்தவரையில் தமது ஒற்றுமையைக் காட்டுகின்ற முறையில் 22 பாராளுமன்ற உறுப்பினரைக் கொண்ட தமிழர் தேசியக் கூட்டமைப்பை தெரிவு செய்தனர். இந்தக் காலகட்டத்தில் உலகின் கவனத்தை எம்பால் திருப்பும் முறையில் விடுதலைப்புலிகளும் தமிழ் தேசியக் கூடடமைப்பு உறுப்பினர்களும் தமிழீழத்தை வலியுறுத்திய நிலையில இணைப்பாடசியில் இனிய வாழ்வு காண்போம் எனறு குரல் எழுப்பினோம். பின்பு அதைக் கூட வலியுறுததாது இடைக்கால அரசையாவது தருமாறு கேட்டோம். சுனாமியின் பின்பு இவற்றைக் கூட வலியுறுத்தாது சுனாமியால் பாதிக்கபபட்ட மக்களுக்காக அரசியல் சார்பற்ற பொதுக்கட்டமைப்பு உருவாக்க வேண்டுமென்று கூட்டமைப்பும் விடுதலைப் புலிகளும் அரசை வேண்டி நின்றனர்.

ஆனால் இந்த கடல் கோளினால் தமிழ் மக்கள் அழிவுறுதலைக் கண்கூடாகக் கண்டும் சிங்கள அரசு இரங்க ம்றுத்ததன் விளைவு ஏறக்குறைய 10 மாதம் உருண்டோடிய நிலையில் கடல்கோளினால் பாதிக்கப்பட்ட மக்கள் கண்ணீர் விட்டுக் கதறும் நிலை உருவானது. இவையனைத்தையும் நினைவு கொண்டுதான் இனிமேல் இரக்கமற்ற கொலையாளிகளுடன் கூடி வாழ முடியாது என்ற முடிவிற்கு வந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பும் தமிழீழ விடுதலைப்புலிகளும் தமிழர் எழுச்சிப் பேரவையும் ஈழம்தான் முடிந்த முடிவு என 1976ஆம் வட்டுக்கோட்டையில் விட்டுக்கொடுக்காது எடுத்த தீர்மானத்தை வடக்கின் எல்லை வவுனியாவில் தமிழரின் சுயநிர்ணய கோடபாட்டை ஓங்கி ஒலித்து உலகின் கவனததை ஈர்க்கும் முயற்சியில் ஈடுபட்டோம்.

இதே குரல் மீண்டும் மீண்டும் மீன் பாடும் தேனாடாம் மட்டக்களப்பிலும் ஓங்கி ஒலிக்கப்பட்டது. பின்பு வன்னியிலிருந்து வையத்தை நோக்கி குரல் எழுப்பினோம். பின்பு தமிழனின் தொல்லை நீங்க முல்லையில் பெரும் மாநாடு கூட்டினோம். அடுத்து இம் மாதம் 28ஆம் திகதி திருக்கேடினை நீக்கும் கேதீச்சரமும் மடுமாதாவும் எழுந்தருளிய மன்னாரில் மாநாடு கூட்டி எம் எழுச்சிக குரலை எழுப்புகிறோம்.

இவை அனைததுக்கும் சிகரம் வைப்பது போல் தமிழினத் தின பண்பாட்டின் தலைநகர் யாழ்ப்பாணத்தில் மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் திரண்டு கலந்துகொள்ளும் நிலையில் வரலாறு காணாத ஓர் பொங்குதமிழ் வடிவில் பொறுத்தது போதும் என பொங்கி எழ இருக்கின்றோம்.

இந் நிகழ்ச்சி மாற்றமுடியாத வரலாற்றுத் திருப்புமுனையாக விளங்கப் போவது உறுதி. பூத்ததடா தமிழீழம் புலர்ந்ததடா தமிழன் வாழ்வு என காசியானந்தன் கண்ட கனவு நனவாவது உறுதி. ஐ.நா.மன்றில் தமிழீழப் புலிக்கொடி பட்டொளி வீசிப் பறக்கப்போவதும் உறுதி. அதைத் தாழ்ந்து பணிந்திட ஆயத்தமாகுக என அனைவரையும் அழைத்துப் பெருமிதமும் பேருவகையும் கொள்கிறோம். விரைவில் இவை அனைத்திற்கும் மேலாக தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை உலகத்தலைவன் என உலகம் உவந்து ஏற்பதும் உறுதி.

எனவே பொங்குதமிழ் நிகழ்ச்சிக்கு இலட்சக் கணக்கில் திரண்டு வாரீர். உலகின் கவனத்தை எம்பால் ஈர்ப்பீர் எனக் குறிப்படப்பட்டுள்ளது. (ற)

### பொங்குதமிழ் சொல்லும் செய்தி

## சர்வதேசத்தின் மனக் கதவைத் தட்டட்டும்

–கனடா தமிழ்ப் படைப்பாளிகள் கழகம்

பொங்கு தமிழ் நிகழ்வு சீரோடும் சிறபபோடும் எழிலோடும் பொலிவோடும் நடக்க வேண்டுமென கனடா தமிழ்ப் படைப்பாளிக்ள் கழகம் வாழ்த்துத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில்,

பொங்குதமிழ் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை மக்கள் மயப்படுத்துவதில் மகத்தான வெற்றி கண்டது.

பொங்குதமிழ் நாங்கள் எங்கள் வீடுகளுக்குச் செல்வுதற்காக இராணுவத்தினரே நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள என்ற முழக்கத்தை தமிழீழத்தை ஆக்கிரமித்து நிற்கும் சிங்களப் படைக்கு அறிவித்தல் கொடுத்தது.

பொங்கு தமிழ் சொல்லும் செய்தி அனைத்துலக நாடுகளின் மனக்கதவைத் தட்டட்டும! பொங்கு தமிழ் விடுக்கும் செய்தி கனேடிய அரசின் செவிப்பறையை எட்டட்டும்!

இப பொங்குதமிழ் பொன்நாளில் கண்டம் விட்டுக் கண்டம் வந்தாலும் தாயக விடுதலைப் பயிருக்கு நாளும் பொழுதும் நர் வார்ப்போம் எனச் சூளுரைக்கிறோம்!

இப் பொங்குதமிழ் நன்னாளில் மண் மீட்புப் போருக்குத் தோள் கொடுக்கும் உங்களுக்கு நாங்கள் கை கொடுப்போம் என உறுதி கூறுகிறோம்! எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

## மயானச் சுவரைக் கட்டக் கோரிக்கை

சுனாமி ஆழிப்பேரலை, மயிலியதனை மயானத்தின் மதிற் சுவரையும் மடத்தையும் அள்ளிச்சென்றுவிட்டதால் அம்மயானம் எவ்வித பாதுகாப்புமற்ற நிலையில் காணப்படுகிறது.

மாரி மழை ஆரம்பமாவதற்கு முன் இம் மயானத்தின் மதிலைக் கட்டாவிட்டால் மயானத்தின் முழு மணலும் கடலுக்குள் போய விடும் நிலை ஏற்படும்.

இதனால் மாரி மழைக்கு முன் மேற்படி மயானத்தின் மதிலையும் மடத்தையும் கட்டித்தர வேண்டுமென வல்வெட்டித்துறை நகரசபை விசேட ஆணையாளரை நெற்கொழு வைரவர் தேவஸ்தான தர்மகர்த்தா சபை கடித மூலம் கேட்டுக் கொண்டுள்ளது. (து-4)

கொடுத்தும் கொளல் வேண்டும் மன்ற அடுத்துஇருந்து
மாணாத செய்வான் பகை - குறள்

வலம்புரி

## எயர்மார்சல் ஹரிகுணதிலகவின் கேள்விக்கு என்ன பதில்

போரை ஆரம்பிக்குமாறு கோரும் ஜே.வி.பி ஆயுதம் ஏந்திப்போராட முன்வருமா? இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் முன்னாள் விமானப்படைத் தளபதி எயர்மார்சல் ஹரிகுணதிலக.

மீண்டுமோர் யுத்தத்தை விரும்பும் ஜே.வி.பி. யிடம் உரிய நேரத்தில் உரியவாறு கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.கேள்வி எழுப்பியவர் சாதாரண மானவர் அல்ல.

அவர் இலங்கையின் முன்னாள் விமானப் படைத்தளபதி. நாட்டின்யுத்தத்தில் பங்கு கொண்டவர்.

யுத்தத்திற்கு தனது மகனைப் பலிகொடுத்தவர். இவ்வாறு யுத்தத்தோடு நெருங்கியிருந்த ஹரிகுணதிலக போரின் கொடூரத்தை தனது ஓய்வுகாலத்தில் நன்கு உணர்ந்தவர்.

அதனால் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக குரல்கொடுத்து வருபவர்.

அதேவேளை விடுதலைப்புலிகளின் ஆயுப் போராட்டம் நியாயமானது. தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஆயுதம் ஏந்துவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை.

இத்தகைய நிலையை இலங்கை அரசுகளும், பேரினவாதிகளுமே ஏற்படுத்தினர் என்ற உண்மையை ஹரிகுணதிலக உணர்ந்திருந்தார். சிங்களத்தரப்பு விமானப்படைத்தளபதியாக இருந்த ஒருவர் சமாதானத்தை வலியுறுத்துவதென்பது அவரது பட்டறிவின் பக்குவமான முடிவென்பதை சிங்கள மக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

அரசியல் இலாபங்களுக்காகவும், பதவி ஆசைக்காகவும் போரை விரும்பும் ஜே.வி.பி. ஏழைமக்களின் உயிரிழப்பில் தனது அரசியல் எதிர்காலத்தை கட்டியெழுபத் திடசங்கற்பம் பூண்டுள்ளது.

அதாவது படையினருக்கு ஆட்களைச் சேர்க்கும்போது அதில் இணைந்துகொண்டவர்களின் பின் புலத்தை ஆராய்ந்தால் அவர்கள் ஏழைக் குடும்பத்தைச் சார்ந்தவர்களாக இருப்பதை அறிய முடியும்.

படையில் சேர்வதன் மூலம் தமது குடும்ப வறுமையை ஓரளவேனும் போக்கமுடியுமென்பதாலேயே அவர்கள் படையில் இணைந்து கொள்கின்றனர்.

இவ்வாறு ஏழ்மை காரணமாக படையில் சேரும் இளைஞர்களுக்கு பேரினவாதிகள் போதனைசெய்து அவர்களை 'தமிழினத்திற்கு எதிராக செயற்படுமாறு தூண்டுகின்றனர்.

தமது பிள்ளைகளை வசதி வாய்ப்போடு கல்வி கற்க வைத்துக்கொண்டு ஏழைச்சிங்கள இளைஞர்களை பலிக்கடாக்களாக்கும் ஜே.வி.பி.போன்ற இனவாதிகளை இனங்காண்பதும், அவர்களின் சுகபோக வாழ்க்கைக்காக யுத்தத்தை மீண்டும் ஆரம்பிக்க அவர்கள் எடுக்கும் நடவடிக்கைகளை முறியடிக்கவும் சிங்கள மக்கள் முன்வர வேண்டும்.

இல்லையேல் அதன் விளைவு பாரதூரமானதாக அமையும்.

இதனையே எயர்மார்சல் ஹரிகுணதிலக எழுப்பிய கேள்வி சுட்டிநிற்கின்றது. போரை மீண்டும் ஆரம்பிக்க விரும்பும் ஜே.வி.பி.தான் ஆயுதம் ஏந்திப்போராடத்தயார் இல்லையெனின் அவர்கள் யார்மூலமாக போரை நடத்தி தங்களின் இருப்பை நிலைநாட்ட முற்பட்டார்கள் என்பது ஊகித்தறியவேண்டியதொன்றாகும்.

## சுகாதாரம் பேண ஒத்துழைப்புத் தாருங்கள் பொதுமக்களுக்கு துண்டுப் பிரசுரமூலம் வேண்டுகோள்

(சுதுமலை)

பொதுமக்கள் வீட்டுக்குப்பை கூழங்களை தகுந்த முறையில் அப்புறப்படுத்தாவிட்டால் பாரிய பிரச்சினைகள் எதிர்காலத்தில் ஏற்பட வாய்ப்பு உண்டாகும எனத்தெரிவித்து நல்லூர் பிரதேச செயலரும் பிரதேசசபையின் செயலாரும் இணைந்து துண்டுபிரசுரங்களை பொதுமக்களிற்கு விநியோகித்து வருகின்றனர்.

சமாதான ஒப்பந்தத்தின் பின்னர் யாழ்.மக்களின் நுகர்வு, உற்பத்தி மற்றும் சேவைகள் அதிகரித்ததன் காரணமாக திண்மக்கழிவின் அளவும் அதிகரித்துள்ளது. அங்கு பார்த்ததும் குப்பை கூழங்கள் குவியலாக காணப்படுகின்றன. இதன் காரணமாக ஈக்கள் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்து தொற்று நோய்கள் பரவுவதற்கு இடமளிக்கின்றது. அத்துடன் துர்நாற்றம் வீசுவதுடன் வீட்டினதும் நகரினதும் சுகாதாரம் சீர்குலைகிறது. மேலும் கழிவுப் பொருட்கள் ஒரே இடத்தில் பல நாள் தேங்குவதால் சேதனக் கழிவிலிருந்து வடியும் கழிவு நீர் நிலத்தடி நீரை மாசுபடுத்துகின்றது.மேலும் வீட்டில் சேரும் கழிவுகளை பலர் அன்றாடம் பாவிக்கும் வீதிகளில் எறிந்து உள்ளூராட்சி அமைப்பு அகற்றினால் என்ன எமது வீடு அழகாக இருந்தால் மட்டும் போதும் என்ற கருத்துடன் அருவருக்கத்தக்க கழிவுகளை தினம் தினம் வீதிகளில் எறிவதை காண முடிகின்றது. எனவே அறிவுள்ள மனிதர் தம்மால் உருவாக்கப்பட்ட இக்கழிவுகளை முழுக்க உள்ளூராட்சி அமைப்புக்களை நம்பி வீதியில் எறியாமல் மனித சிந்தனையுடன் செயற்படுவது அவசியமாகும். உள்ளூராட்சி மன்றத்தில், ஆள்வளம், நிதி வளம், கழிகளை சேகரிக்கும் இடவசதிகள் போன்றவை பற்றாக்குறையாக இருப்பதாகவும் பொதுமக்களிடம் இருந்து அறவிடப்படும் வரிப்பணம் கூட இத்தேவைக்கு போதுமானதாக இல்லை. எனவே வீட்டில் சேரும் கழிவுகளை தமது வீட்டு வளவினுள் அல்லது பொருத்தான இடத்தில் இடுவதன் மூலம் அதனை நல்ல முறையில் பயன்படுத்தலாமென துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-252)

## வீதியை திருத்தக் கோரிக்கை

கெருடாவில் வடக்கு கிராம சேவகர் பிரிவிலுள்ளதும் வல்வை சிதம்பரக் கல்லூரிக்கருகில் ஆரம்பித்து தெற்கு நோக்கிச் சென்று ஆலயம் கட்டையில் திரும்பி நெற்கெழு வைரவர்கோவில் அருகே நெற்கெழு கொம்மாந்தறை நொத்தாரிக்காடு ஊடாக சென்று வல்லை நகரசபையின் தெற்கு எல்லை வீதியைச் சந்திப்பதுமான வீதி 176 வருடங்களுக்கு மேல் பழைமைவாய்ந்த வீதியாகும். இப்பகுதிமக்கள் தமது தோட்டங்களுக்குத் தேவையான பசளைகளையும், தோட்டவிளை பொருட்களையும் உழவு இயந்திரங்கள், லொறிகள் மூலம் ஏற்றியிறக்க இவ்வீதியையேபயன படுத்துவது வழக்கம். தற்போதுள்ள வல்லை நகரசபை, பட்டின சபையாக இருந்த காலத்தில் மேற்படி வீதி வழியாகத்தான் மின் இணைப்பு வழங்கப் பட்டிருந்தது.

ஆனால் இப்பொழுது ஆலயம் கட்டையிலிருந்து நெற்கெழு வைரவர் கோவிலுக்குச் செல்லும் வீதி கல், சல்லிக்காக கிண்டிக்கிளறி அழிக்கப்பட்டு வருவதால், அவ் வீதியால் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது ஆதலால் இத்தகைய நாசகாரச் செயல்களைத் தடுத்துநிறுத்தி இவ்வீதியை மக்கள் பயன்படுத்தக்கூடியதாக அமைத்துத்தர வேண்டும். இவ்வாறு நெற்கெழு வைரவர் தேவஸ்தான தர்ம கர்த்தா சபையினர் வல்வெட்டித்துறை நகரசபை விசேட ஆணையாளருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள். (து-47)




கிராம அபவிருத்தித் திணைக்களத்தால் கிராம மகளிர், கிராம அபிவிருத்தி சங்கத் தலைமைத்துவத்தினருக்கு வழங்கப்பட்ட தலைமைத்துவப்பயிற்சி சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. இப் பயிற்சியில் கலந்து கொண்டவர்களுடன் கிராம அபிவிருத்தி அதிகாரியையும் படத்தில் காணலாம். படம்:- சாவ.நிருபர்



தமிழகப் பெண்களைப் பற்றி தரக்குறைவாகக் கருத்துத் தெரிவித்ததாக பல அமைப்புக்கள், நடிகை குஷ்புவுக்கு எதிராக போராட்டம் நடத்திவருகின்றனர். இதைக் கேள்விப்பட்ட குஷ்பு சிங்கப்பூர் பயணத்தை பாதியில் முடித்துக்கொண்டு சென்னை திரும்பி "தான் யாரையும் புண்படுத்தும் விதத்தில் பேசவில்லை" என கண்ணீர் மல்க பேட்டியளித்தார். இதன்போது அவரின் பல்வேறு முகபாவங்கள்.

## இடைவிலகிய மாணவர்களை பாடசாலையில் இணைக்க ஏற்பாடு

யாழ்ப்பாண பிரதேசசெயலரின் அனுசரணையுடன் உருவாக்கப்பட்ட மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு அண்மையில் மேற்கொண்ட நடவடிக்கையின் போது, மாநகரசபை எல்லைக்குட்பட்ட ஜே/78 கிராம சேவையாளர் பிரிவில் பாடசாலை செல்லாதிருந்த 13 மாணவர்கள் இனங்காணப்பட்டு மீண்டும் அவர்கள் தத்தமது பாடசாலைகளில் கல்வி கற்பதற்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

பாடசாலை செல்லாதிருக்கும் மாணவர்கள் பற்றிய விபரங்கள் தமக்கு அறியத்தரு மிடத்து அவர்களுக்கு தகுந்த ஆலோசனைகளை வழங்கி அவர்கள் தமது கல்வியைத் தொடரும் விதத்திலான நடவடிக்கையை யாழ்.மாவட்ட சிறுவர்பாதுகாப்புக்குழு மூலமாக மேற்கொள்ள முடியுமென யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாஸ் அறிவித்துள்ளார். (ற)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



என் மதம் தான் நீடிக்கும் மற்ற மதங்கள் எல்லாம் அழிந்து விடும் என்று நினைப்பவனைப் பார்த்து நான் பரிதாபப்படுகிறேன். இனி எல்லா மதங்களும் பரஸ்பரம் உதவிக்கொள்ளும். சண்டையிடாது. அழிக்கப் புறப்படாமல் அரவணைத்து தன் வசப் படுத்திக்கொள்ளும்.

சுவாமி விவேகானந்தர்

## தபால் ஊழியர்கள் வேலைநிறுத்தம்

(கொழும்பு)

தபால் ஊழியர்கள் நேற்று முன்தினம் நள்ளிரவு தொடக்கம் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமது பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் கிடைக்காமையினால் தாம் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக தபால் தொலைத்தொடர்பு உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (இ-8)

## மண்டைதீவில் அபிஷேகம்

(மண்டைதீவு)

மண்டைதீவு சிறுப்புலம் முருகன் ஆலயத்தின் வருடாந்த அபிஷேகப் பெருவிழா இன்று காலை 8 மணிமுதல் நடைபெறவுள்ளது.

அபிஷேக நிகழ்வுகளை சிவஸ்ரீ என். யோகேஸ்வரக்குருக்கள் நிகழ்த்திவைக்கவுள்ளார். (ந)

## சுனாமி நிதிமோசடி

# விசாரணையை இடைநிறுத்துமாறு பிரதமர் உயர்நீதிமன்றில் மனு!

(கொழும்பு)

சுனாமி நிவாரணமாகக் கிடைத்த 8 கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட நிதிவிடயத்தில் நம்பிக்கை மோசடி செய்ததாக கூறப்பட்டு தனக்கு எதிராக நடாத்தப்படவுள்ள விசாரணைகளை இடைநிறுத்துமாறுகோரி பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவில் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, பிரதிப் பொலிஸ்மா அதிபர் லயனல் குணதிலக, பொலிஸ் இன்ஸ்பெக்டர் பி.எம்.பாவல, ஐக்கியதேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹபீர் ஹாசீம், சட்டமா அதிபர் கமலசபேசன் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சுனாமி நிவாரணம் தொடர்பான ஹெல்பிங் அம்பாந்தோட்டை நிதியத்தோடு சம்பந்தப்பட்ட அனைத்து வங்கிக் கணக்குகளையும் பரிசீலிக்குமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு கோட்டை மஜிஸ்ரேட் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளதென பிரதமரினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனிதஉரிமை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வுத் திணைக்களம் கோட்டை மஜிஸ்ரேட் நீதிமன்றத்திடம் விடுத்த கோரிக்கையை அடுத்து, அதற்கான அனுமதியை நீதிமன்றம் வழங்கியிருந்தது.

கடந்த 2 மாதங்களாக இந்த விடயம் தொடர்பான விசாரணைகளை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் நடாத்திவருவதன் காரணமாக தமது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது.

தனது அரசியல் வாழ்க்கையை சீரழிக்கும் நோக்கில் ஹெல்பிங் அம்பாந்தோட்டை நிதியம் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஹபீர் ஹாசீம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் முறைப்பாடு செய்திருப்பதாகவும்,

அரசாங்கத்திற்குச் சொந்தமான 8 கோடியே 29 இலட்சத்து 58 ஆயிரத்து 247 ரூபா நிதி தொடர்பான விசாரணையை இடைநிறுத்துவதற்கு உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை பிரதமரினால் சமர்ப்பிக்கப்பட்ட மனு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாக பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தெரிவித்துள்ளார். (இ-8)

## நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர் விபரம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளின் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றியவர்களை ஆசிரிய சேவைக்குள் இணைப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விபரம் வருமாறு,

கே.திலகவதி, விஜயகுமாரி சிற்றம்பலம், சின்னவன் சரஸ்வதி, இலகுப்பிள்ளை சிவகரன், வசந்தினி காசிப்பிள்ளை, மாணிக்கவாசகர் பாலரஞ்சினி, சத்தியபாமா ராசலிங்கம், பாலசிங்கம் பத்மவதனி, செல்வநாயகி வடிவேல், தங்கவேல் யோகேஸ்வரி,

சதாசிவம் உமாபதி, சகுந்தலா சின்னப்பு, கந்தசாமி எழில்வாணி, ஜெயந்தினி நந்தகுமார், சிவமலர் மகேஸ்வரன், சண்முகம் தங்கமலர், சுந்தரமூர்த்தி பிரேம்குமார், குமுதமனோகரி ஆனந்தராஜா, சண்முகம் நகுலேஸ்வரன், துரைராணி சின்னத்துரை,

சுதாமதி கணேசன், சரோஜாதேவி அருள்நாயகம், கோகிலா ராமசாமி, வி.தமிழ்ச்செல்வி, கனகன் கலைச்செல்வி, சந்திரன் குமாரதாஸ், திருச்செல்வம் விஜயசிறி, கிருஷ்ணன் திருச்செல்வன், சிவராஜா சிவரூபி. (ந-108)

## மூன்று பொலிஸாருக்கும் விளக்கமறியல் நீடிப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த மூன்று பொலிஸாரையும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதி வரையும் தொடர்ந்தும் தடுப்புக்காவலில் வைக்குமாறு தமிழீழ நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மன்னார் சிலாபத்துறையில் சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் வெளிநாட்டவர் ஒருவரைக் கைதுசெய்யச் சென்றபோது இம் மூன்று பொலிஸாரும் தமிழீழ காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

இம்மூவரும் கிளிநொச்சி மாவட்ட தமிழீழ நீதிமன்றத்தில் நீதியாளர் சாதனா முன்னிலையில் நேற்று முற்படுத்தப்பட்டனர்.

மூன்று பொலிஸாரும் கைது செய்யப்பட்டமை தொடர்பாக தமிழீழ காவல்துறையின் பரிசோதகர் பவானி நீதியாளருக்கு தெரிவிக்கையில்,

யுத்தநிறுத்த உடன்பாட்டின்படி எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அவர்கள் அனுமதியின்றி உள்நுழைந்தமையானது தவறானது. தவறாக உள்நுழைந்துவிட்டோம். இடம்தெரியாது என்று கூறுவது ஏற்றுக் கொள்ளமுடி யாது.

ஏனெனில் இவர்கள் ஒரு இராணுவப் பிரிவைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். அத்துடன் எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் உள்நுழைந்தபோது சிவில் உடையில் தோற்றமளித்தனர்.

முதல் விசாரணையின்போது தம்மை இனங்காட்டிக்கொள்ள மறுத்துவிட்டனர். இவர்களுடைய உள்நுழைவானது சதிநோக்கமாக இருக்கலாம். அது தொடர்பான புலன் விசாரணைகள் நடைபெற்றுவருவதால் இவ் விசாரணை களை மேற்கொள்வதற்கு பதினான்கு நாட்கள் கால அவகாசத்தை நீதிமன்று வழங்க வேண்டும்.

தமிழீழ குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 58 உப பிரிவு - 2 இன் கீழ் இன்னும் 15 நாள்வரை மூன்று பொலிஸாரையும் தமிழீழ காவல்துறையினரால் தடுத்துவைக்க முடியும் எனத் தெரிவித்தார். (இ-4)

## ஐரோப்பிய ஒன்றிய...

நாடுகள் இணங்கியுள்ளன.

விடுதலைப்புலிகள் தொடர்ச்சியாக சிறுவர்களை படையில் சேர்த்து வருவது குறித்து கடும் விசனம் அடைந்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ள ஐரோப்பிய ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கத்தக்க இத்தகைய விடயங்கள் தொடருமானால் அதற்கு எதுவித மன்னிப்பும் வழங்கப்படமாட்டாது என்பதை நினைவுபடுத்துவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

மேலும் தேர்தல் நடைபெறவுள்ள காலகட்டத்தில் இலங்கையில் உள்ள சகல தரப்பினரும் சமாதான முயற்சிகளை முன்னிட்டு அர்ப்பணிப்புடனும் பொறுப்புணர்வோடும் செயற்படவேண்டும் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

அத்தோடு இனப்பிரச்சினைக்கு அவசியமான அமைதியான அரசியல் தீர்வினை பாதிக்கக்கூடிய செயல்களில் இலங்கையில் உள்ள எந்தத்தரப்பினரும் ஈடுபடக்கூடாது எனவும் ஐரோப்பிய ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளினால் தொடரப்படும் வன்முறைகள் மற்றும் பயங்கரவாத செயல்கள் ஆகியவற்றைக் கண்டிக்கும் வகையில் ஐரோப்பிய ஒன்றியம் நிறைவேற்றிய தீர்மானத்தின்போது இவ் விடயங்கள் வெளியிடப்பட்டதாக பிரித்தானியாவின் வெளிவிவகார மற்றும் பொது நலவாய அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய ஏற்றுக் கொள்ளமுடியாத சம்பவங்கள் பேச்சுவார்த்தைகளில் விடுதலைப் புலிகளின் பங்களிப்பினைப் பாதிப்பதோடு சமாதான முயற்சிகளில் பாரியவிளைவை ஏற்படுத்தும். அத்தோடு வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரின் படுகொலையையும் இலங்கையில் இடம் பெறும் ஏனைய கொலைகளையும் தாம் கண்டிப்பதாகவும் ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-4.7)

## ஐக்கிய இலங்கைக்குள்...

சிறிகோத்தாவில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் இந்நிகழ்வு இடம் பெற்றது.

இத்தேர்தல் அறிக்கை முதலில் மதத் தலைவர்களிடம் கையளிக்கப்பட்டது. இதனையடுத்து மக்களுக்கு வழங்கப்பட்டது.

முதற்பகுதியில் பசி, வேலைவாய்ப்பு பிரிவினைவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தல் ஆகியன இடம்பெற்றுள்ளன.

இரண்டாம் பகுதியில் ஆழிப்பேரலை மீளமைப்புப் பணிகள் தொடக்கம் பெண்களின் உரிமைகள், வெளிவிவகாரங்கள் ஆகியவை இடம்பெற்றுள்ளன.

★ ஐக்கிய இலங்கை என்ற கட்டமைப்புக்குள் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு

★ வடக்குக் கிழக்கு மக்களுக்கு சமாதானத்தின் பெறுபெறுகள் சென்றடைவதற்காக வழிவகைகளை அமைத்தல்.

★ யுத்தம் மற்றும் சுனாமி என்ற இரு அனர்த்தங்களையும் எதிர் நோக்கியுள்ள மக்களுக்கு மனிதாபிமான ரீதியான அபிவிருத்தி உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான புதிய வழிகளைத் தேடுதல்.

★ வடக்குக் கிழக்கு யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களுக்கு பிரத்தியேக அமைச்சு ஒன்றை உருவாக்கல்.

★ சுனாமி நிவாரணசபை தொடர்பான வழக்கில் யுத்தநிறுத்த உடன்படிக்கையின் செல்லுப்படித் தன்மை உறுதிப்படுத்தப்பட்டிருப்பதனால் சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பித்தல்.

★ கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதி செய்வதோடு, அமைதி முயற்சிகளில் முஸ்லிம் பிரதிநிதித்துவத்திற்கு உத்தரவாதம் அளித்தல். முஸ்லிம் மக்களின் கருத்துக்கள் அனைத்தும் பரிசீலனைக்கு எடுத்தல்.

மேற்கூறிய அடிப்படையில் நிரந்தரத் தீர்வுகாண மக்கள் எமக்கு வாக்களிக்கவேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-4)


**INFORMATION TECHNOLOGY PARK**
Jaffna, Sri Lanka.
Under the purview of the
Ministry of Agricultural Marketing Development, Co-operative Development, Hindu Affairs and Assisting Education and Vocational Training.
MPCS Building,
127, K.K.S Road, Jaffna, SriLanka.
Office : 021 222 3641
Fax No : 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் விசேட கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் எதிர்வரும் 05-10-05 வரை பெற்று பதிவுகளை மேற்கொள்ளலாம்.

உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களிற்கான விசேட கணனிப் பயிற்சி

**Special On-Line Classes**

* Dip.in PC Application & Office Management
Based on Ms-Office
(Week days only)

வகுப்புக்கள் ஆரம்பம்- 05-10-05

மேற்படி கற்கை நெறிக்கான பதிவுக் கட்டணம் : 250/-

**Centre for Information Technology**
-Executive Officer



மனோகரா


கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30

நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்
இன்னும் சில நாட்களுக்கு
மணிகண்டன், சிம்ரன், ஜெய்ஆகாஷ் நடித்த
கிச்சா வயசு 16
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
புதிய வெளியீடு
சரத்குமார், வைகைப்புயல் வடிவேலு, நமீதா நடித்த
சாணக்கியா

நிறைஞ்சனாஸ் சங்கானை
விக்ரம், சதா, விவேக் நடித்த


கா.நே: 11.30, 02.45, 6.00 (பு.நே)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.09.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.